# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 12

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

August 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


# தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை நீடூழி வாழ்க!

நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், இலட்சியம், கலாச்சாரம் மற்றும் விழுமியவுணர்வு ஆகியவற்றின் குறிப்பிட்டதொரு முன்னேறிய தரத்தினை குறிப்பிட்ட கட்டத்திலேயே முடக்கி வைத்துவிட முடியாது. அது சரத்சந்திரர், நஸ்ருல், அல்லது ரவீந்திரநாத் ஆகியோரின் கலாச்சார தரமாக இருந்தாலும் சரி, புத்தர், இயேசு, சங்கராச்சார்யா, முகமது போன்றோர் மட்டுமின்றி மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் கருத்தியல் அல்லது அறநெறிக் கோட்பாடுகளா கவே இருந்தாலும் சரி, இவற்றை ஒரு குறிப்பிட்ட கட்டத்திலேயே முடக்கிவைத்திட ஒருவர் முயற்சித் தால் இவை எல்லாமே ஒரு நாள் பிற்போக்கான தாகப் போய்விடும். ஒன்று அது முன்னோக்கி செல்ல வேண்டும் அல்லது பின்னடைய வேண்டும்; நகராமல் அப்படியே இருப்பதற்குச் சாத்தியமே இல்லை. இதை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு மற்றொரு விஷயத்தை விவாதிப்போம்.

எண்ண உருவாக்கம் என்று நாம் எதைக் கூறுகிறோம்? சிந்தனைகள், கருத்துக்கள் என்பவை யாவை? ஒருபுறம் தனி நபரின் மூளைக்கும் சுற்றியுள்ள யதார்த்த உலகத்திற்கும் இடையேயும், மற்றொரு புறம் மூளைக்கும் நிலவுகின்ற சமூக சூழலுக்கும் இடையேயும் தொடர்ச்சியான ஓய்வில்லா மோதல்களும் முரண்பாடுகளும் நடை பெற்று வருவதை நாம் அறிவோம். ஒரு தனிநபரின் சிந்தனைகள், கருத்துக்கள் மற்றும் மனவோட்டம் ஆகியன இவ்விரண்டு முரண்பாடுகளின்மூலம் விளைந்தவையே, இவ்விரண்டு முரண்பாடுகளின் மூலம் வளர்பவையே, ஒட்டுமொத்த சமுதாயத்தில் உள்ள தனிநபர்களின் சிந்தனைகளை விஞ்ஞானப் பூர்வமாக பொதுமைப்படுத்தி ஒன்றிணைக்கும் செயல்முறைப்போக்கின் மூலமாகத்தான் சமூக எண்ணம் உருவாகி வளர்கிறது – அதையே நாம் சமூக சிந்தனை என்று அழைக்கிறோம்.



5 ஆகஸ்ட் 1923 – 5 ஆகஸ்ட் 1976

**சிப்தாஸ் கோஷ்**

ஒரு புறம் இந்த சமுதாய சிந்தனைக்கும் மனித மூளையின் அகமுரண்பாடு அதோடு இயற்கை மற்றும் புற உலகுடனான அதன் முரண்பாடு நிகழ்ந்துவரும் போக்கில், மற்றொருபுறம், மனிதரின் அறிவும் அவரது சிந்தனை உலகமும் உருவாகி தொடர்ந்து வளர்ந்துவருகிறது. இந்த முரண்பாட்டை ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள் வைத்துக்கொள்ள யாராலும் முடியாது. இந்த இரண்டு முரண்பாடுகளையும் மனித சிந்தனைக் களத்திற்குள்ளேயே கைது செய்து வைக்க முடிந்திருந்தால் மனிதனின் சிந்தனை உலகை அப்படியே நிலையாக வைத்திருக்க முடிந்திருக்கும். ஆனால் அதை எங்கும் நிறுத்த முடியாது. நீங்கள் ஏதாவது ஒரு சிந்தனையை, கருத்தை காலங்கால மாக இருக்க வைக்க நினைத்தால், ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அது எவ்வளவுதான் முற்போக்காக இருந்தாலும், அதை அப்படியே கைது செய்து வைக்க நினைத்தால், வேறு ஒன்றுதான் நடக்கும், அது குணரீதியாக பிற்போக்காகிவிடும்.

இயக்கம் இரண்டு வகைப்பட்டது. நம்மை முன்னோக்கி இட்டுச்செல்லக்கூடியது ஒரு வகை இயக்கம். அதாவது முற்போக்கானது, மற்றொரு வகை நம்மை பின்னுக்குத் தள்ளக்கூடியது. பின்னுக்குத் தள்ளுவது பிற்போக்கானது ஆகும். இன்று குறிப்பிட்டதொரு சித்தாந்தம் சமூக விழிப் புணர்வின் அதிஉயர்ந்த தரத்தை பிரதிபலிப்பதாக இருக்கலாம். அதாவது, இன்றைய சமூகத்தேவைக்கு ஏற்றதாகவும் சமூக முன்னேற்றத்திற்கு உகந்ததாகவும் அச்சித்தாந்தம் இருக்கலாம். ஆனால், சூழ்நிலை மாறும்போது, அதாவது, உற்பத்தி முறை அல்லது வாழ்க்கை முறை மாறும்போது, புதிய தேவைகள் எழுகின்றன. இந்த மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நமது சிந்தனைகள், கருத்துகள், விழுமிய உணர்வு, அல்லது சித்தாந்தம் ஆகியவற்றை மாற்றாவிட்டால், முன்னேற்றாவிட்டால் என்ன நடக்கும்? ஒரு காலத்தில் முற்போக்காக இருந்த

தொடர்ச்சி 2ம் பக்கம்

## இறக்குமதி வரிப்போர்

# முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்துக்கு உள்ளேயிருக்கும் தீவிர நெருக்கடி மற்றும் தீர்க்கவியலா முரண்பாட்டின் வெளிப்பாடேயன்றி வேறேதுமல்ல

சில பத்தாண்டுகளுக்கு முன்புதான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான முதலாளித்துவ உலகம் மிகுந்த உற்சாகத்துடன் எவ்வித இறக்குமதி வரியும் இன்றி, உலகம் முழுவதும் இனி சுதந்திரமாக வர்த்தகம் செய்யலாம் என தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தது. உலகமயமாக்கல் மூலம் இது புதிய புதிய சந்தைகளைத் தாராளமாக திறந்து விடுவதுடன் வளமையை நோக்கிய, நல்லிணக்கத் துடன் வாழக்கூடிய உலகை உருவாக்கும் என்றும் அவர்கள் கூறினார்கள். இறக்குமதி வரி இல்லாத உலகம் அல்லது உலகமயமாக்கல் சாமானிய மக்களுக்கு வளமையைக் கொண்டுவருமா என்பது வேறு கேள்விகளாகும்.

ஆனால் எதிர்பார்த்தவாறே, அத்தகைய முழக்கங்க ளெல்லாம் ஓய்ந்துவிட்டன. உலகமயமாக்கல் என்பது முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் என்றழைக்கப் படும் நாடுகளிலுள்ள மக்களுக்குக்கூட வேலை யின்மை, ஏற்றத்தாழ்வு போன்றவற்றிற்கு இணையான அஞ்சத்தகு சொற்றொடராக மாறிவிட்டது. வேறு எந்த நாட்டவர் இல்லாவிட்டாலும், சமீபத்தில் பிரான்ஸ் நாட்டுத் தொழிலாளர்கள் தனியார்மய மாக்கலை நரகத்துடன் ஒப்பிட்டிருக்கிறார்கள். இத்தகைய பின்னணியில், கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் இதே ஏகாதிபத்திய நாடுகள் தலைகீழாக மாறி ஏற்றுமதி இறக்குமதி வரி ஒன்றுக்கொன்று பரபரப்பாக விதித்துக்கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் தலைவனான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிற நாடுகளை மறைமுகமாக, அல்லது வெளிப்படையாக அச்சுறுத்திக்கொண்டி ருப்பதுடன், அவர்களின் இந்த நடவடிக்கையை 'பொருளாதாரத் தேசியவாதம்' என்றழைத்துக் கொள்கின்றனர்.

### விலைப்பட்டியல் போர் துவங்கிவிட்டது

ஒரு வர்த்தகபோர் அல்லது இறக்குமதி வரிப்போர் (Tariff War) என்பது உண்மையில் என்ன? ஒரு நாடு, அந்நிய நாட்டுப்பொருட்கள் மற்றும் சேவை (Services) வரத்து இருக்கையில், தனது உள்நாட்டுத் தொழிற்சாலைகளைப் பாதுகாத்திட ஒருவகையான வரியைச் சுமத்துகையில் மற்றும் அந்நிய நாடுகள் பதிலடியாக இதே போன்ற வாணிப பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, வர்த்தக அல்லது இறக்குமதி வரிப்போர் ஆரம்பித்து, உக்கிரமாகி இறுதியில் அது சர்வதேச வர்த்தகத்தைக் குறைத்துவிடுகிறது.

தன்னழிவை ஏற்படுத்தும் இத்தகைய சமீபத்திய திட்டத்தில் அமெரிக்காவானது அதன் முதலாளித் துவ–ஏகாதிபத்தியக் கூட்டாளியான ஐரோப்பிய ஒன்றியம், கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளி லிருந்து இறக்குமதியாகும் இரும்புக்கு 25% வரியையும் அலுமினியத்துக்கு 10% வரியையும் 31 மே, 2018 நள்ளிரவு முதல் விதித்தது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் 'முதலில் அமெரிக்கா' எனும் கோஷத்துடன் சீனா, தென்கொரியா நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சலவை எந்திரங்கள் மற்றும் சூரிய ஒளித் தகடுகள் போன்றவைக்கு ட்ரம்ப் ஏற்கெனவே வரி விதித்ததின் மூலம் இது முன்பே துவங்கிவிட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மெக்சிகோ, கனடாவிலிருந்தும் ஏற்றுமதியாகும் கார்களுக்கு 25% வரி விதிப்பது பற்றியும்கூட அமெரிக்கா பேசிக்கொண்டிருக்கிறது. அமெரிக்கப் பொருட்களை பிற நாடுகள் நுகர்வதைவிட, அந்நாடுகளிலிருந்து அமெரிக்கா அதிகம் இறக்குமதி செய்ததனால், அமெரிக்கா பெரும் வர்த்தகப் பற்றாக்குறையைச் சந்தித்து, அதன் விளைவாக பல வருடங்களாக அமெரிக்க மக்களுக்கு அது எண்ணற்ற இடைஞ்சல் களைத் தந்துகொண்டிருக்கிறது எனும் வாதத்தை முன்வைத்து ட்ரம்ப் நிர்வாகம் இச்செயலை நியாயப் படுத்தியது. அவ்வாறு கூறப்படும் பற்றாக்குறை இருந்தபோதிலும், அவர் அமெரிக்க ஏகபோகங்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை நீடூழி வாழ்க . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

சித்தாந்தம், பிற்காலத்தின் மாறிய ஒரு சூழலில், வாழ்வின் புதிய தேவைகளைக் கொண்டு பார்க்கையில் பிற்போக்கானதாக மாறிவிடும். இயல்பாகவே அது நம்மைத் தொடர்ந்து கீழே தள்ளிவிடும். இவ்வாறுதான் ஒரு சித்தாந்தத்தை மதிப்பீடு செய்யவேண்டும். மனிதனது சிந்தனைகளும். சிந்தனை உலகும் படிப்படியாக வளர்ந்து முன்னேற்ற மடைந்துள்ளன. ஒவ்வொரு கட்டமும் தனக்கு முந்தைய கட்டத்தை முந்திச்சென்றுள்ளன. இவ்வாறு தான் புராதன சமுதாயத்திலிருந்து நவீன சிந்தனைகளும் கருத்துக்களும் கொண்ட இன்றைய சமுதாயம் முன்னேறியுள்ளது. இவ்வாறு பார்ப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஒரு கேள்விக்கு உங்களில் யாராலும் விடையளிக்க இயலாது என்று நான் நினைக்கிறேன். உதாரணத்திற்கு, புத்தர், இயேசு கிறிஸ்து, சங்கராச்சார்யா, முகமது போன்ற மாமனிதர்கள் வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் உருவானவர்கள் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். மத நம்பிக்கை உடையவர்கள் இவர்களை தேவ தூதர்கள், கடவுளின் அவதாரங்கள், இரட்சகர்கள் என்றெல்லாம் கருதுகின்றனர். ஆனால் மனிதயியல்வாதிகள் அல்லது நவீன கருத்துகளால் கிரகிக்கப்பட்டவர்கள் இவர்களை மாபெரும் மனிதர்கள் என்றும் அதிஉயர்ந்த ஆளுமைகள் என்றும் கருதுகின்றனர். இன்று நாம் யாரைப் பெரியவர்கள் என்று புகழ்கிறோமோ அவர்களை விட இம்மாமனிதர்கள் மிக உயர்ந்தவர்கள் ஆவர். தாங்கள் வாழ்ந்த காலங்களில், அவர்கள் தங்களுடைய மேதைமையின் ஐயத்திற்கப்பாற்பட்ட முத்திரையை பதித்துச் சென்றுள்ளனர். நம்முடைய காலத்தில், நம்மில் எத்தனைபேர் அவர்களுக்கு இணையானவர்களாக நிற்கிறோம்! ஆனால் இன்று நாம் மிகவும் போற்றக்கூடிய நவீன சிந்தனைகளையும் கருத்துக்களையும் புத்தர், இயேசு, சங்காராச்சார்யா, முகமது நபிகள் போன்ற மாமேதைகளின் புத்தி கூர்மை படைக்க முடியவில்லை என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. அவர்களுடைய மிக உயர்ந்த அறிவுத் தரத்தைக்கொண்டு நவீன சிந்தனைகள், கருத்துக்களை முன்மொழிய முடியவில்லை.

உதாரணமாக, ஜனநாயக விழிப்புணர்வு, வாழ்க்கை மற்றும் சமுதாயம் பற்றிய ஜனநாயகக் கோட்பாடுகள், மதச்சார்பின்மை, மதச்சார்பற்ற மனிதாபிமானம் போன்ற கோட்பாடுகள் லட்சியங்களையும், தனிநபர் சுதந்திரம், பெண் விடுதலை, சுதந்திரம், விடுதலை போன்ற புதிய விழுமிய உணர்வுகளையும் எடுத்துக் கொள்வோம். இவை அனைத்தும் தொழில் அல்லது முதலாளித்துவப் புரட்சியை மையமாகக் கொண்டு மாறிய உற்பத்தி முறையோடு கூடவே வளர்ந்தவையாகும். இவற்றைப் பற்றி இன்று பள்ளி மாணவர்கள் கூட ஓரளவு தெரிந்து வைத்திருப்பர். ஆனால் இந்த கருத்துக்களையும் லட்சியங்களையும் புத்தர், இயேசு, சங்கராச்சார்யா, முகமது போன்ற மேதைகளால் அறிய முடியவில்லை. அவர்கள் மேதமை குறைந்தவர்கள் என்றோ உயர்வாக சிந்திக்கும் திறனற்றவர்கள் என்றோ இதற்குப் பொருளல்ல. இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் யாதெனில், மனித சிந்தனைகளும் கருத்துக்களும் தோன்றுவதற்கான பொருளாய சூழல் (Material Condition) முதலில் உருவாகிறது, அதன் பின், அதனை அடித்தளமாகக் கொண்டுதான் சிந்தனை உலகம் உருவாகிறது. மனித சிந்தனை சக்தியின் ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தின் எல்லை இங்கேதான் இருக்கிறது. இந்த உண்மையை ஏற்காதவர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். இதற்கு அவர்கள் விடையளிக்கட்டும். இன்று நாம் உருவாக்கியுள்ள மேன்மையான கருத்துக்கள், நவீன சிந்தனைகள், கோட்பாடுகளையெல்லாம் அந்த மாபெரும் மனிதர்களால் ஏன் சிந்திக்க முடியவில்லை? சுதந்திர சிந்தனைதான் தனிநபரின் அறிவுத்திறனை மையமாகக்கொண்ட இந்த சிந்தனை உலகை ஈன்றெடுத்துள்ளது என்று கூறும் சிந்தனையின் மாறா சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டோர் இந்தக் கேள்விக்கு தெளிவான விடையளிக்கட்டும். இந்தக் கேள்வியை எதிர்கொள்ளும்போது சிந்தனையின் மாறா சர்வநிச்சயமான சுதந்திரம் என்ற கோட்பாடு மாயையே என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வர். உண்மையில், ஒரு தனிநபருடைய சிந்தனையின் சுதந்திரம் ஒப்பீட்டளவிலானதே ஆகும். அதற்கான எல்லைகளும் உண்டு. பொருளாய சூழலின் எல்லைகளே அந்த எல்லைகள் ஆகும்.

அப்படியானால் நாம் காண்பது என்ன? உதாரணத்திற்கு உங்களது சிந்தனைகள், அல்லது அஜய் முகர்ஜி[1] அவர்களின் சிந்தனைகள், அல்லது எனது சிந்தனைகள், என்றெல்லாம் நாம் கூறுகின்றோமே, இவற்றின் உண்மையான பொருள் என்ன? தனிநபர் சிந்தனை எப்படி வளர்கிறது? இதை நாம் முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு, 'சமூக சிந்தனை' என்றால் உண்மையிலேயே என்ன என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எதிரெதிர் போக்குகள் கொண்ட சிந்தனைகள், கருத்துக்கள், கோட்பாடுகளுக்கிடையே இடையறாத மோதல்களும் முரண்பாடுகளும் நிகழும் பிறவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சித்தாந்த–கலாச்சார வகைப்பாட்டைத்தான் நாம் 'சமூக சிந்தனை' என்று கூறுகிறோம். இந்தப் மோதல்களும் முரண்பாடுகளும் ஏன், எதற்காக நிகழ்கின்றன என்பதில் பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் சமூக சிந்தனையின் குறிப்பிட்டதொரு வகைக்குள் பல்வேறு சிந்தனைப் போக்குகள் நிலவுகின்றன என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. குறிப்பிட்டதொரு சூழ்நிலை அல்லது பின்புலத்திற்குள் பலதரப்பட்ட சிந்தனைகளையும் கருத்துக்களையும் உள்ளடக்கிக்கொண்டு அவற்றிற்கிடையே மோதல்களையும் முரண்பாடுகளையும் கொண்டதாக விளங்குகின்ற ஒன்றைத்தான் சமூக சிந்தனையின் ஒரு வகைப்பாடு என்று நாம் அழைக்கிறோம். ஒருவரது சிந்தனை என்பதும் அனைத்து தனிநபர்களின் சிந்தனை என்பதும் இந்த சமூக சிந்தனையின் உருவகமேயன்றி வேறேதுமல்ல. தனிநபர்மூலம் உருவகப்படும் சமூக சிந்தனையைத் தான் நாம் தனிநபர் சிந்தனை என்று அழைக்கிறோம். இவ்வாறாகத்தான் சங்கராச்சார்யரின் சிந்தனை வளர்ந்தது. இயேசு அல்லது முகமதுவின் சிந்தனைகளும், ராஜாராம், ரவீந்திரநாத், சரத்சந்திரர், நஸ்ரூல் ஆகியோரின் சிந்தனைகளும், வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றிய அரசியல் சிந்தனையாளர்களின் சிந்தனைகளும் இவ்வாறாகவே வளர்ந்தன. இவ்வுண்மையிலிருந்து தப்ப முடியாது. சிந்தனை உருவாவதற்கான பருப்பொருள் அமைவு, உடல் அமைவியல், மூளை அமைவியல், சமூகச்சூழல் மற்றும் இயற்கைக்கும் மனித மூளைக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய அனைத்தும் சிந்தனை வளர்ச்சிக்கு ஓர் எல்லையை வகுக்கின்றன. எனவே மனிதனின் சிந்தனை உலகமானது, அதாவது அவனது எல்லைகள் மற்றும் கருத்துக்களானது பொருளாதாய சூழலுக்கு உட்பட்டு, சுற்றுச் சூழலுக்கு ஏற்பதான் வளர்ந்து வந்துள்ளது. அது பருப்பொருளாதாய சூழலுடனான முரண்பாட்டில்தான் நிலவுகிறது. ஆனால் அதற்காக உற்பத்தி வழிமுறையும் வாழ்க்கை முறையும் மாறுகையில், அம்மாற்றங்கள் நிகழ்ந்த உடனேயே மனிதனின் சிந்தனைகளும் கருத்துக்களும் தானாகவே மாறிவிடும் என்று பொருளாகாது. இவ்வாறு தானாக உடனே மாறிவிடும் என்ற கருத்து தவறானதாகும். அவற்றுக்கிடையேயான உறவு அப்படிப்பட்ட இயந்திரகதியானதல்ல. இவ்விரண்டிற்குமான உறவு ஒன்றுக்கொன்று தொடர்புடைய–இயக்கவியலானது. மனிதனின் சிந்தனை உற்பத்தி, சிந்தனை உலகம், சமூக சிந்தனை ஆகியன பொருள் உற்பத்தி என்ற அடித்தளத்திற்கான மேற்கட்டுமானமாகவே வளர்கின்றன. அவ்வாறிருந்தபோதிலும், சிந்தனை உற்பத்தி, சிந்தனை உலகம், சமூக சிந்தனை ஆகியன பருப்பொருளாதாய சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான செயல்போக்கில் பதிலுக்கு இடைவிடாத தாக்கத்தை செலுத்துகின்றன. ஆயினும், நிலவும் பருப்பொருளாய சூழலின் வரம்புகளை எந்தவொரு சூழ்நிலையிலும் மனிதனின் சிந்தனை உலகால் ஒருபோதும் மீறிச் செல்ல முடியாது. எனவேதான் கடந்த காலத்தின் மாமேதைகளில் ஒருவரால்கூட நவீன சிந்தனைகளையும் கருத்துக்களையும் படைக்க இயலவில்லை...

மனிதயியல்வாதத்திற்கு முந்தைய அனைத்து சித்தாந்தங்களும் மத விழுமியங்கள் என்ற அர்த்தத்திலான சிந்தனை விழிமியங்களின் அடித்தளத்தின் மீது உருவானவையாகும். மனிதர் அனைவரும் கடவுளின் குழந்தைகளாகக் கருதப்பட்டனர்; எனவே மனிதர்கள் அனைவரிடத்தும் அன்பும் கருணையும் கொள்ளவேண்டும் என்பதே இவ்வனைத்து சித்தாந்தங்களின் அடிப்படை போதனைகளாக இருந்தன. கடவுள் நம்பிக்கையிலிருந்து குறிப்பிட்ட சில விழுமிய உணர்வு எழுகிறது. இவற்றை தத்துவமொழியில் நாம், ப்ரியோரி முன்கணிக்கப்பட்ட விழுமியங்கள் என்று அழைக்கிறோம். ஆனால் மனிதயியல்வாதம் அல்லது பூர்ஷ்வா மனிதயியல் வாத்திலிருந்து முளைவிட்டு வளரும் விழுமிய உணர்வு பிரதானமாக மனிதனைச் சுற்றி வளர்ந்தவையாகும். சமூக தேவையையும் சமூக விழிப்புணர்வையும் அங்கீகரிப்பதே இதன் குவிமையமாகும். இந்த மனிதயியல்வாதம்தான் மனித இன சமுதாயத்தில் முதன்முறையாக, மத நம்பிக்கைகளிலிருந்தும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகளிலிருந்தும் வளர்ந்த விழுமிய உணர்வுக்கு எதிரான மதச்சார்பற்ற, ஜனநாயகக் கருதுக்கள், சிந்தனைகளை மனித சமுதாயத்திற்குக் கொண்டுவந்தது. மதச்சார்பின்மை என்றால் பூலோகம் சார்ந்தது என்று பொருளாகும். அதாவது, இந்த பூலோகத்திற்கானது ஆகும். எனவே மதச்சார்பற்ற கருத்துக்கள் அனைத்தும் இயற்கைக்கு அப்பாற்பட்ட எந்தவொன்றையும் அங்கீகரிக்காமை என்பதிலிருந்து துவங்குகின்றன. ஆனால் இந்தியாவில் மதச்சார்பற்ற அரசு என்பது அனைத்து மதங்களுக்கும் சமமான ஆதரவு தருவது என்பதாக சிறுமைப்படுத்தப்பட்டுவிட்டது. இதற்கான பெருமை எல்லாம் ஐயத்திற்கிடமின்றி நாட்டின் இராஜதந்திரிகளையும், 'கருத்தியல்வாதிகளை'யும் அரசியல் தலைவர்களையுமே சாரும். ஆனால் மதச்சார்பற்ற அரசு என்ற கோட்பாடு உருவானதின் நோக்கமே அரசையும் சமூக பொருளாதார வாழ்வையும் அரசியல் கலாச்சார இயக்கத்தையும் மதம் மற்றும் தேவாலயங்களின் செல்வாக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்ற உண்மையை நாம் அறியாமையாலோ அல்லது வேண்டுமென்றோ பார்க்கத் தவறுகிறோம். மதச்சார்பற்ற ஜனநாயக வாழ்க்கை கோட்பாடு மற்றும் மதச்சார்பற்ற மனிதயியல்வாதம் ஆகியவற்றின் அடித்தளம் இதுவேயாகும்.

இதில், அதாவது மதச்சார்பின்மையின் பொருளை சிறுமைப்படுத்தியதில், காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் பூர்ஷ்வா அறிவுஜீவிகளின் பங்கு பற்றி புரிந்துகொள்வது சிரமம் இல்லை, ஆனால் மார்க்சிஸ்ட் என்றும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்றும் அறியப்படுபவோரின் சிந்தனை, நடத்தை, அன்றாட நடவடிக்கைகள், மதச்சடங்குகளுக்கு அவர்கள் அளிக்கும் அதிகரிக்கும் ஆதரவு போன்றவை மூலம் அவர்கள் மதச்சார்பின்மை கோட்பாட்டிற்கு இழைக்கும் துரோகம்தான் வியப்பூட்டுகிறது. இத்தலைவர்கள் அனைவரும் மதச்சார்பற்ற அரசு என்பதன் அர்த்தத்தை இந்த அளவிற்கு சிறுமைப்படுத்தியதற்குப் பின்னர்,

தொடர்ச்சி 10ம் பக்கம்

[1] அஜய் முகர்ஜி என்பவர் தோழர் சிப்தாஸ் கோஷ் இவ்வுரையாற்றிய போது மேற்கு வங்கத்தின் முதல்வராக இருந்தவர் அவரும் அக்கூட்டத்தின் மேடையில் அப்போது வீற்றிருந்தார்.

## புதுச்சேரி

## கல்விக்கட்டண உயர்வுக்கெதிரான போராட்டம் வெற்றி



புதுச்சேரியில் சுய்ப்ரேன் வீதியிலுள்ள கூட்டுறவு கல்வியியல் கல்லூரியில் ஆண்டு கல்விக் கட்டணம் ரூ**35** ஆயிரத்திலிருந்து ரூ**51** ஆயிரமாக உயர்த்தப்பட்டது. இதைக் கண்டித்து கல்லூரி மாணவிகள் கல்லூரி முன்பு போராட்டம் நடத்தினர்.

இதற்கு அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (AIDSO) முன்னணித் தோழர் உதயன் தலைமை தாங்கினார். பின்னர் புதுச்சேரி முதல்வருடன் நடந்த பேச்சுவார்த்தையில் கட்டண உயர்வை திரும்பப்பெறுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் வெற்றி பெற்றது ■

# செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் துறையின் பிரம்மிக்கத்தக்க முன்னேற்றம் அறிவியல் வளர்ச்சியின் மற்றொரு மைல்கல்

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), ரோபோடிக்ஸ் (Robotics) துறையிலும் அறிவியல் தொழில்நுட்பத்தின் ஒவ்வொரு துறையிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பிரமிக்க வைக்கிறது. சில பத்தாண்டுகளுக்கு முன்பு நாம் கனவில் கூட நினைக்காதவற்றை யெல்லாம் கூட சாதிப்பதற்கு இது இட்டுச் சென்றுள்ளது. ஸ்மார்ட் போன்களைப் பற்றியோ, அல்லது தேடு பொறிகளில் சுட்டெலி (SEARCH ENGNES) கொண்டு ஒரு சொடுக்கு சொடுக்கினாலே பரந்துவிரிந்து கிடக்கும் அறிவுக் களஞ்சியங்களை இணையம் மூலம் அடைவது குறித்தோ அல்லது தானியங்கி, அதாவது ஓட்டுனரே இல்லாமல் சிற்றுந்துகள் சாலைகளில் ஓடுவதைப் பற்றியோ யாராவது நினைத்து பார்த்திருப்பார்களா? ரோபோட் உதவியுடனான அறுவைச் சிகிச்சை, அதாவது ஒரு மருத்துவர் லண்டனிலோ அல்லது உலகின் ஒருமூலையில் இருந்துகொண்டு, கல்கத்தாவிலோ, சென்னையிலோ உள்ள மருத்துவமனையில் உள்ள நோயாளிக்கு, இதுவரை கண்டிராத வகையிலான துல்லியமான அறுவைச் சிகிச்சையை ரோபோடிக்ஸ் கரங்களின் உதவியுடன் செய்வார் என்றோ நினைத்திருப்பார்களா? ஆளில்லா ஆய்வு தானியங்கி படமெடுக்கும் கருவிகள் (Drones) விவசாய நிலங்களின் மீது பறந்து சென்று பயிர்–மண்–பருவநிலைகளை துல்லியமாக கணித்து சொல்வதையும், பல்வேறு வகையிலான தானியங்கி விவசாய–ரோபோட்டுகள் (Agribots) மிகவும் துல்லியமாக களையெடுப்பதையும், உரங்களையும் பூச்சி மருந்துகளையும் தெளிப்பதையும், அதுவும் பணத்தை மிச்சப்படுத்தும் வகையில் தெளிக்கும் என்பதையும் யாராவது நினைத்திருப்பார்களா? உற்பத்தியின் ஒவ்வொரு களத்திலும் சமூக வாழ்க்கையிலும் உலகம் முழுவதிலும் உதாரணங்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. செயற்கை நுண்ணறிவும் (AI- Artificial Inelligence) ரோபோடிக்ஸூம் மேலும் வளர்ச்சியடையும் போது இன்னும் மேலான வளர்ச்சிகள் தொடர்ச்சியாக வரவிருக்கின்றன. இன்றைய முதலாளித்துவம் அறிவியல் வளர்ச்சியை அதன் போக்கில் முன்னேறுவதை ஊக்குவிக்காமல் மாறாக அறிவியல் பயிற்றுவித்தலில் பல்வேறு வகைகளில் தடையை ஏற்படுத்த முயற்சித்தும், அறிவியலின் தொழில்நுட்ப விஷயங்களை மட்டும் தனது அழுகிப் போன முதலாளித்துவ அமைப்பை நடத்துவதற்கு உதவுவதற்காக மட்டுமே பயன்படுத்திக்கொள்வதை ஊக்கப்படுத்தும் நிலையை எல்லாம் தாண்டி அறிவியல் தொழில்நுட்பத்தின் இந்த பிரம்மிக்கத் தக்க தொடர் முன்னேற்றம் நடைபெற்றுவருகிறது.

## செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸின் வளர்ச்சி கணினி அறிவியல் முன்னேற்றத்தால் விளைந்தது

செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் என்றால் என்ன என்பதை முதலில் சுருக்கமாகப் பார்ப்போம். **1956**லேயே செயற்கை நுண்ணறிவு என்பது பாடசாலைகளில் ஒரு பிரிவாக தொடங்கப்பட்ட போதிலும் **21**ஆம் நூற்றாண்டில் கணினி அறிவியலும் கணினி சக்தியும் முன்னேறியதன் பயனாக இதுவும் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்தது. மனிதனைப் போலவே செயல்படக் கூடிய நுண்ணறிவோடு செயல்படக்கூடிய வகைலான இயந்திரங்களை வடிவமைப்பதற்காக மனிதனின் நுண்ணறிவை முற்றிலுமாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதும் செயற்கை நுண்ணறிவின் அடிப்படை இலக்குகளில் ஒன்றாகும். அதி உயர்ந்த தொழில்நுட்ப, சிறப்பியல்பு ஆராய்ச்சியான செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சிக்கு இயந்திரங்களை கற்றுணர்தல், புள்ளியியல் ஆய்வு, மொழியியல், தர்க்கம், நரம்பியல்விஞ்ஞானம், இன்னும் இது போன்ற எங்கு பயன்படுத்த வேண்டியுள்ளதோ அதற்கு தேவைப்படும் இதர வகை அறிவுகளும் தேவைப்படுகிறது. உதாரணத்திற்கு, செயற்கை நுண்ணறிவு நிபுணர்கள் அல்லது ஆராய்ச்சியாளர்கள் மிகவும் சிக்கலான அதேநேரத்தில் தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட கணித அல்காரிதம்களைப் கணினி திட்ட நிரல்களை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றனர், அது ஏராளமான தரவுகளை மின்னல்வேகத்தில் இயந்திரங்கள் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்வதோடு, அவற்றின் செயல்படுதன்மையை ‘அனுபவங்களிலிருந்து’ ‘கற்றல்’ மூலம் மேம்படுத்துகிறது. உதாரணத்திற்கு கணினி விளையாட்டுகளை எடுத்துக்கொண்டால், முன்கூட்டி எழுதப்பட்ட கட்டளைகளை செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி கணினி ஒரு வீரராக மனித வீரரோடு விளையாடுகிறது. இயந்திரமும் கற்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அதாவது கணித அல்காரிதங்கள் மூலமான கணித வழியில், ஒவ்வொரு முறையும் கிடைக்கும் புதிய தரவுகளைப் பெற்று அவற்றை நினைவகத்தில் சேமித்து வைத்து செயல்படுத்துவதன் மூலமாக கிடைக்கும் ‘அனுபவத்தின்’ மூலம் கணினி விளையாட்டாளர் கற்கிறார். இப்படியாகத்தான், செயற்கை நுண்ணறிவு, அல்லது கணினி இயந்திர விளையாட்டாளர், செஸ் போன்ற தந்திர நுண்ணறிவு விளையாட்டுகளில் மனிதர்களோடு வெற்றிகரமாகப் போட்டியிடுவதற்கு ‘கற்றுக்கொள்வதோடு’ மட்டுமல்லாமல், உலக சாம்பியன்களையும் கூட தோற்கடிக்கின்றன.

செயற்கை நுண்ணறிவும் ரோபோடிக்ஸூம் நெருக்கமான பரஸ்பரத் தொடர்புடையவை. ரோபோட்டுகள் கருத்துரு, வடிவமைப்பு, கட்டமைத்தல் செயல்பாடுகளைப் பற்றி ரோபோடிக்ஸ் கையாளும் அதே வேளையில் ரோபோட்டுகள் தங்களது குறிப்பிட்ட பணிகளை ‘நுண்ணறிவோடு’ தானாக செய்யும் வகையிலான கணினி திட்ட நிரல்களை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகிறது. நீண்டகாலமாக இதுவரை பயன்படுத்தப்படும் மனிதர்களின் கட்டுப்பாட்டில் மனிதர்களால் இயக்கப்படும் இயந்திரங்களுக்கு மாறாக ரோபோட்டுகள் மனிதர்களின் கட்டுப்பாடின்றி குறிப்பிட்ட பணிகளை தானாகவே செய்யும்படி திட்டமிட முடியும். அதாவது அவற்றிற்குள்ளேயே இணைக்கப்பட்டிருக்கும் சென்சார்களிடமிருந்து கிடைக்கும் குறிப்பிட்ட சமிக்ஞைகளுக்கு அல்லது உத்தரவுகளுக்கு ஏற்ப ரோபோட்டுகள் செயல்படவைத்திட முடியும். ரோபோடிக்ஸ் என்பது பொறியியலும், கணினி அறிவியல் உள்ளிட்ட அறிவியல் துறைகளும் சேர்ந்த ஒரு பல்கூட்டுத் துறை, இது சைபர்நெட்டிக்ஸ் விஞ்ஞானத்தையும் எடுத்துக்கொண்டது. கிட்டத்தட்ட செயற்கை நுண்ணறிவு உருவாவதற்கு பத்தாண்டுகளுக்கு முன்பே உருவான சைபர்நெட்டிக்ஸ் துறை கணிதம், உயிரியல், உடலியங்குவியல், நரம்பியல் போன்ற இன்ன பிற துறைகளின் தொடர்புடையதாகும். இது இயந்திரங்களில், உயிர் வாழ்பவைகளில், அமைப்புகளில் கட்டுப்பாட்டையும் தொலைத்தொடர்பு அமைப்பையும் கையாள்கிறது. கட்டுப்பாட்டு தொலைத்தொடர்பு அமைப்பு செயலை அல்லது மாற்றத்தை தூண்டக்கூடிய பின்னூட்ட இணைப்பை (Feedback-loop) உள்ளடக்கியது ஆகும். ரோபோடிக்ஸ் என்பது வெறுமனே ரோபோட்டுகளை உருவாக்குவதை மட்டுமல்லாது கணினி அமைப்புமுறையை (Computer Systems) உருவாக்குவதையும் கையாள்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ரோபோட்டுகளை உருவாக்குவது பல்வேறு களங்களில் தானியங்குதலை கொண்டுவந்ததைப் போலவே கணினிசார் அமைப்புகளிலும் பல்வேறு செயல்களில் தானியங்குதலை ரோபோடிக்ஸ் உருவாக்கியுள்ளது. இதன் விளைவாக, மனிதர்கள் நீண்டகாலமாக கணினியில் செய்துவரும் திரும்ப திரும்ப செய்யப்பட்ட பணிகளை தானியங்கியாக ஆக்கலாம், அதாவது எப்போதும் தூங்காத ரோபோட் மென்பொருள் மூலமாகவோ அல்லது மாய துணையோடோ (Virtual Assistant) செய்யலாம். இத்தகைய கணினி அல்லது ரோபோடிக் தானியங்கு செயல்முறைகள் பல்வேறு மட்டங்களில், தகவல் தொழில்நுட்பம், தொழிற்சாலை, வங்கி, தொழில், சேவைத் துறை, ராணுவம் உள்ளிட்ட பல்வேறு துறைப் பணிகளில் பயன்படுத்தப்படும். ரோபோட்டுகள் மூலமான தானியங்கு செயல்பாடு (Robotic Process Automation) என்பது இன்று முழுவீச்சில் வராவிட்டாலும் வரும் காலத்தின் அதன் பயன்பாடு அதிகரிக்கும்.

மாய உதவியாளர் (Virtual Assistant) சில நேரங்களில் நுகர்வோரோடு பேசுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. அனுபவங்களின் மூலமாக ‘கற்றுக் கொள்ளும்’ அவற்றின் திறமை நுகர்வோரை அதிகமாக திருப்திப்படுத்துகிறது என்று கூறப்படுகிறது. எனவேதான், பெர்னார்ட் லெவைவாட், டெக் பார்ம் நுவான்ஸ் நிறுவனத்தின் மின்னணு நுகர்வோர் கையாள்வதற்கான தீர்வுகள் (Digital Consumer Engagement Solutions) பிரிவின் பொதுமேலாளர் கூறுகிறார்: ‘நுகர்வோர் உரையாடல்களில் தற்போது **60%** முதல் **80%** உரையாடல்கள் வரை மாய உதவியாளரால் மனிதனின் உதவியின்றி கையாளமுடியும், இது **5** ஆண்டுகளுக்கு முன்பு **25%** முதல் **30%** வரை இருந்தது’. ஏற்கெனவே–திட்டநிரல் புகுத்தப்பட்டுள்ள குரல் கட்டளைகளும் நெறிமுறைகளும் அதாவது அல்காரிதம்ஸ் என்று கூறப்படுவது (Algorithms) அடங்கிய பேச்சு உணர்தலைப் பொருத்தே இது வளர்ந்துள்ளது. கூடவே செயற்கை நுண்ணறிவின் முயற்சிகள் மனித பேச்சை புரிந்துகொள்வதை நோக்கி திரும்பியுள்ளது. இது மிகவும் வேறுபட்ட மட்டத்திற்கு சென்றுள்ளது. பொருளும் சூழலும் இதில் சம்மந்தப்படிருப்பதால், இது தொடர்பாக, சில ஆரம்ப கட்ட அளவிலான நடவடிக்கைகள், குறைந்த அளவில், ரோபோட்டுகளுக்கு சில கேள்விகளை கேட்பதற்கான பயிற்சி, அடிப்படை அளவில் அளிக்கப்படுகிறது. மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பணியிடங்களை தானியங்கியாக ஆக்குவதற்காக மனிதர்களைப் போன்ற ரோபோட்டுகள் அதிக அளவில் பல்வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான முன்னேற்றங்களை குறிப்பிட வேண்டுமென்றால் (தொழில்நிறுவனங்கள், வங்கிகள், கடைகள் இன்னும் இதுபோன்றவைகளில் வைக்கத் தக்க மாதிரியாக விளங்கக்கூடிய) மிகவும் புகழ்பெற்ற சமூக ரோபோட், சோபியா வைக் குறிப்பிடலாம், இதில் பேசும்போது பல்வேறு முகபாவனைகளையும் செய்யும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டு சொல்லலாம். மக்களோடு ‘உரையாடுவதற்கும்’ ‘உணர்வுகளை’ ‘அனுதாபங்களை’ வெளிப்படுத்தும் விதமாகவும் சொந்த ரோபோட்டுகள் (Personnel Robots) உருவாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவேதான், ‘உணர்ச்சியை’ ‘புரிந்துகொண்டு’ வெளிப்படுத்தக் கூடியதென்று கூறப்படும் ‘பெப்பெர்’ என்ற முதல் மனித ரோபோட் ஜப்பானில் சாப்ட்பேங்க் ரோபோடிக்ஸ் கார்ப்பொரேஷன் விற்பனைக்குக் கொண்டுவந்தபோது உருவாக்கி வைக்கப்பட்டிருந்த **1000** ரோபோட்டுகளும் ஒரு நிமிடத்திற்குள் விற்றுத் தீர்ந்துவிட்டன. அதற்குப் பின்பு அந்த நிறுவனத்திற்கு ஆர்டர்கள் அளவுக்கு அதிகமாக குவிந்து, இறுதியில் அந்த நிறுவனம் புதிய ஆர்டர் பெறுவதையே நிறுத்திக்கொண்டது.

தற்போது மாபெரும் முன்னேற்றங்கள் அடைந்துவிட்ட நிலையில் ரோபோட்டுகளுக்கு சில மனித குணாம்சங்களும் புகுத்தப்பட்டுவிட்டதாக வாதிடப்படுகிறது. ஆனால் அது எவ்வளவு சிக்கலானதாகவும் முன்னேறியதாக இருந்தாலும் இவை எல்லாமே இயந்திர கற்றல், கணினி திட்டநிரல்களின் அடிப்படையிலான சாதனைகளே என்பதை மனதில் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, மனிதனின் பேச்சின் அர்த்தத்தை உண்மையிலேயே புரிந்து கொள்வதற்கு, மனிதனின் மூளை உடலியங்குவியல் உருவாக்கிய இரண்டாவது சமிக்ஞை அமைப்பின் மூலம் கைவரப்பெற்ற சிந்திக்கும் திறன், கருத்தறிவு, உண்மையான உணர்ச்சிகள் போன்ற மனிதனின் குணாம்சங்களை கைவரப்பெற வேண்டும். ஆக, செயற்கை நுண்ணறிவும் இயந்திர கற்றலும் முன்னேற்றம் கண்டிருந்தாலும், உண்மையான காரண மறிதலும் சிந்தித்தலும் எப்போதும் மனிதனிடமே இருக்கும். செயற்கை நுண்ணறிவு ரோபோட்டுகள் எவ்வளவுதான் சாமர்த்தியமானதாக வந்தாலும் சிந்திப்பது மனிதன்தான். எனவே செயற்கை நுண்ணறிவின் சாதனைகள் எவ்வளவுதான் உயரே சென்றாலும், அது மனிதனின் அறிவாற்றலால் உருவாக்கப்பட்டதுதான், அதை உருவாக்கிய மனிதனைவிட ஒருபோதும் மேலே செல்ல முடியாது.

## செயற்கை நுண்ணறிவும் ரோபோடிக்ஸூம் நாகரீக வளர்ச்சிக்கான அளப்பரிய ஆற்றலை திறந்துவிட்டுள்ளன

செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸின் அதிவேக வளர்ச்சியும் அறிவியல் தொழில்நுட்பத்தின் ஒவ்வொரு பிரிவின் அவற்றின் பயன்பாடும் “சிந்திக்கும்” இயந்திரங்களை, ரோபோட்டுகளை, கணினி திட்டநிரல்களை உருவாக்குவதில் புரட்சிகர முன்னேற்றத்திற்கு இட்டுச் சென்றுள்ளது, இது இன்று மனித நாகரீகத்திற்கு அளப்பெரிய வாய்ப்புகளைத் திறந்துவிட்டுள்ளது. மனிதனை கடுமையான ஒரேவிதமான, திரும்பத் திரும்பச் செய்யும் முதுகொடிக்கும் நீண்ட நேரத்தை விழுங்கக்கூடிய பணிகளிலிருந்து விடுவித்து அவர்களை மிகவும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# செயற்கை நுண்ணறிவு ரோபோடிக்ஸ் முன்னேற்றங்களை முதலாளித்துவம் சமூகத்திற்கு எதிராகத் திருப்பிவிடும் அபாயம்

3ம் பக்கத் தொடர்ச்சி

ஆர்வத்துடனான, அர்த்தமுள்ள, படைப்பாற்றல் மிக்க உழைப்பிற்கு தன்னைத் தானே அர்ப்பணிக்க வழிவகை செய்கிறது. இன்றைய முதலாளித்துவ அமைப்பில் வலுக்கட்டாயமாக செய்துவரும் ஆபத்தான வேலைகளிலிருந்து தொழிலாளர்களை விடுவித்தும் விடலாம். ரோபோட்டுகளிலும் ரோபோடிக்ஸிலும் மேலும் வளர்ச்சிகள் மேன்மையடையும் நிலையில், அது சமுதாயத்திற்குள்ளும் நாடுகளுக்குள்ளும் பரவும்போது, மக்கள் குறைந்த நேரம் பணியாற்றி அதிக உற்பத்தி செய்யும் வாய்ப்பு உருவாகும். இந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனைகளை மனிதகுலத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தினால் ஒவ்வொரு மனிதனுக்கும், அவர் எந்த வேலையை செய்தாலும், ஓய்வு நேரம் அதிகம் கிடைக்கச் செய்து கல்வி, கலாச்சாரப் பணிகளில் ஈடுபடுவதற்கான நேரம் அதிகமாக கொடுத்து, தனிநபர் மற்றும் சமூக வாழ்க்கையை மிகவும் அர்த்தமுள்ளதாகவும் அழகாகவும் ஆக்கும் வாய்ப்பை உண்மையிலேயே உருவாக்கமுடியும்.

இன்று செயற்கை நுண்ணறிவும் ரோபோடிக்ஸும் பயன்படுத்தப்பட்டு நன்மை கொடுக்காத துறையே இல்லை என்று சொல்லலாம். சுகாதாரத் துறையில் மட்டுமே ஏராளமான பலன்கள் கிடைத்துள்ளன, ரோபோட்டுகள் உதவியுடன் செய்யப்படும் அறுவை சிகிச்சைகள் மிகவும் துல்லியமானதாகவும் விரைவான மீள்தன்மையுடனும் வலிகுறைந்ததாகவும் இருக்கின்றன. அல்லது நோய் கண்டறிதலை எடுத்துக்கொள்வோம், உதாரணத்திற்கு இதுவரை நிபுணர்களால் மட்டுமே புற்றுநோய் கண்டறிய முடிந்த நிலையில் தற்போது கூகுள் தாய் நிறுவனம் கேன்சரைக் கண்டறிய உதவும் செயற்கை நுண்ணறிவை வளர்த்துள்ளது. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதன் மூலம் மருந்து கண்டுபிடித்தல் தற்போது முன்னைவிட எளிதாகவும் குறைந்த நேரத்திலும் நடைபெறுகிறது, இத செவிலியர் (Nursing) உதவிக்குப் பயன்படுத்தினால் மேலும் பல அம்சங்கள் சாத்தியமாகும். அபாயம் நிறைந்த தேடல்களிலும் மீட்புப் பணிகளிலும் ரோபோட்டுகளின் பங்கு மதிப்புமிக்கவை, சுரங்களை மூடுவதற்கு, வெடிகுண்டுகளை செயலிழக்க செய்வதிலும், அதாவது மனித உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய செயல்களில் ரோபோட்டுகள் மதிப்புமிக்கவையாகும். உதாரணத்திற்கு, சமீபத்தில் ஃபுக்குசிமாவில், உருகிய அணு உலையின் மையத்தை ஆய்வு செய்வதற்கு நுழைக்கப்பட்ட குழாயில் மிகச் சிறிய ரோபோட் பயன்படுத்தப்பட்டது.

செயற்கை நுண்ணறிவிலும் ரோபோடிக்ஸிலும் ஏற்படும் தொடர்ச்சியான வளர்ச்சி இன்று மனிதகுலம் எதிர்நோக்கியிருக்கும் பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உற்பத்தி மற்றும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் நாகரீகத்தில் புரட்சிகர முன்னேற்றத்தைக் கொண்டு வரும் சக்தி கொண்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனாலும் கூட, இன்றைய முதலாளித்துவ அமைப்பில் எழக்கூடிய கேள்வி என்னவென்றால் இந்த அற்புதமான அறிவியல் சாதனைகளால் என்ன பயன்? முதலாளித்துவம் உருவான நேரத்தில், முற்போக்கு சக்தியாக அது விளங்கிய காலத்தில், நிலப்பிரபுத்துவத்தின் இருண்ட காலத்திலிருந்து சமுதாயத்தை மீட்பதற்கு தான் தலைமை தாங்கும் முகமாக அறிவியலைப் பயிற்றுவித்தலிலும், சமூகத்தை ஜனநாயகப்படுத்தலிலும் முன்னோடியாக விளங்கியது, ஆனால் அது கடந்த காலமாகிவிட்டது. சமூகத்தின் தேவையை நிறைவேற்றுவதற்காக, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உற்பத்தியில் புரட்சிகர மேம்பாட்டின் மூலமாக சமூக முன்னேற்றத்தை முதலாளித்துவம் கொண்டுவந்தது. ஆனால் இன்றைய அதன் பிற்போக்கு காலகட்டத்தில், பல்வேறுவகைகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு, நிதி இல்லை என்றோ அல்லது குறைவான நிதி ஒதுக்கியோ, பலவகைகளிலும் தடைகளை ஏற்படுத்த முதலாளித்துவம் முயற்சிக்கிறது. அல்லது அறிவியல் முன்னேற்றத்தைப் பயன்படுத்தி அணு ஆயுதங்கள் தயாரித்தல், ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இடங்களில் அணுகுண்டு வீசியது போன்ற மிகவும் கொடூரமான செயல்கள் போன்று அறிவியல் சாதனைகளை எல்லாம் அச்சுறுத்தும் வகையில் சமூகத்திற்கு எதிராக மிரட்டுவதற்காகவே பயன்படுத்துகிறது.

## முதலாளித்துவத்தில் செயற்கை நுண்ணறிவு தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான அபாயம் அதிகம் உள்ளது

இராணுவ துறைகள்தான் செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் ஆராய்ச்சிக்கு அதிகமாக நிதி உதவி அளிப்பது நமக்கு மிகவும் கவலை அளிக்கும் விஷயம் ஆகும். உதாரணத்திற்கு, அமெரிக்காவில், நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு–ரோபோடிக்ஸ் ஆய்வு திட்டங்கள், பலவற்றிற்கு டிஏஆர்பிஏ–பாதுகாப்புத்துறை முன்னேறிய ஆராய்ச்சித் திட்ட முகமையானது (Defense Advanced Research Projects Agency) நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு திறமைகள் கொண்ட பல்வேறு வகையான ரோபோட்டுகள் குறித்து அதிக பரிசுத்தொகை அளித்து ஏராளமான போட்டிகளை டிஏஆர்பிஏ நடத்திவருகிறது. இதனால் கடந்த பல ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஆய்வில் ஏராளமான புதிய கண்டுபிடிப்புகளும் திருப்பமான முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. தற்போது, எந்த விலங்கிலோ, பூச்சியிலோ அல்லது இயந்திர வடிவிலோ அளவிலோ ஏன் மனிதனைப்போன்றும் கூட ரோபோட்டுகள் பல்வேறு நோக்கங்களுக்காக ஆயிரத்தோரு திறமைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது சென்சார்களின் மூலமோ அல்லது ஜிபிஎஸ் மூலமோ ஒருவரைப் பின்பற்றி ஒரு ரோபோட் நாயால் 180 கிலோ எடையுள்ள சுமையைத் தூக்கிக்கொண்டு எந்த பகுதிக்கும் கொண்டுசெல்ல முடியும், அதுபோல ஜிபிஎஸ் ஐயும் நவீன வீடியோ கேமராக்களையும் சுமந்துகொண்டு ஒரு குறிப்பிட்ட வீட்டிற்கோ அல்லது இடத்திற்கோ பறந்து சென்று மோதிக்கொள்ளாமல் வீடியோக்களை எடுத்து அனுப்ப ஒரு பறக்கும் தன்மையுடைய ஒரு ரோபோட்டால் முடியும். பொதுவாழ்க்கைப் பயன்பாட்டிற்கோ அல்லது மீட்புப் பணிகளுக்கோ இந்த முன்னேற்றங்களைப் பயன்படுத்திக் கொள்வதைப்போலவே ராணுவத்திற்கும் பயன்படுத்த முடியும் என்பது தெளிவு. கடந்த சில ஆண்டுகளாக ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் ஆயிரக்கணக்கான ரோபோட்டுகளை அமெரிக்க ராணுவம் பயன்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன, ஆனால் அவை ஆயுதங்களை இதுவரை கையாளவில்லை.

பல்கலைக்கழக ஆய்வகங்களில் ரோபோட் கால்பந்து அணி விளையாடுவதும், ஒவ்வொரு போட்டியிலிருந்து கற்றுக்கொண்டு உலக சாம்பியனாவது என்பதெல்லாம் பிரச்சினை இல்லாததாகவோ அல்லது அறிவியல்பூர்வமாக குதூகல மூட்டுவதாகவோ தற்போது இருக்கலாம். அல்லது சமூக ரீதியான அமைப்பாகவும் செயல்பாட்டாளராகவும் உதாரணமாகக் காட்டப்படும் எறும்புக் கூட்டத்தைப் போலவே உயிரிஎறும்பு ரோபோட்டுகளை (Biotic Ants) உருவாக்கும் ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன. இவை எல்லாம் மிகவும் சிறியவை என்பதால் பொறியியல் மூலமாக இவற்றின் கால்களை உருவாக்க முடியாது, இவற்றிற்கான கால்களை முப்பரிமாண அச்சடிப்பான்கள் (Printers) மூலமாகத்தான் செய்ய முடியும். இவற்றின் மாபெரும் அறிவியல் அற்புதங்கள் மெச்சத்தக்கது என்றாலும், இந்த இரண்டு உதாரணங்களும் மிக மோசமான விளைவுகளுக்கும் பயன்படுத்த முடியும். ஏனென்றால், ஆயுத தொழிற்சாலைகள் ரோபோட் சிப்பாய்களை, அல்லது ‘போர்க்களத்தில்’ ஒன்றிணைந்து செயல்படும் வல்லமையுள்ள ‘கொலைகார’ ரோபோட்டுகளை உருவாக்க முயற்சித்து வருகின்றன. இந்த வகையில் பார்த்தால் மேற்சொன்ன இரண்டு உதாரணங்களும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கான மோசமான வாய்ப்பு இருப்பதை குறிக்கின்றன. செயற்கை நுண்ணறிவால் தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்கள் (Autonomous Weapons) தயாரிக்க முடியும் என்பது ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் நிபுணர்கள் இதற்கு எதிராக குரலெழுப்பியுள்ளதோடு, இதன் மோசமான பின்விளைவுகளைப் பற்றியும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக பவுல் சார் எனும் ஆயுத எந்திர நிபுணர், “ராணுவ செயல்பாடுகளில் வியக்கத்தக்கதாக இருக்கக்கூடிய ஒன்றுசேர்ந்து கூட்டாகச் செயல்படும் ரோபோ எந்திரங்கள் சிக்கலான மாற்றத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது என எழுதியுள்ளார்.

இவை எல்லாம் வெற்று யூகங்கள் அல்ல. சந்தையை கட்டுப்படுத்துவதிலும் தங்களுக்கான பங்கைப் பகிர்ந்துகொள்வதிலும் எழுந்த முரண்பாட்டால் ஏகாதிபத்தியங்கள் இரண்டு உலகப்போர்களை நடத்திவிட்ட நிலையில் இன்று முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பெருகிவரும் சந்தை நெருக்கடியை சமாளித்து முதலாளித்துவப் பொருளாதாரத்தை காப்பதற்காக பொருளாதாரத்தை ராணுவமயமாக்கி வருகின்றனர். அதாவது சந்தையை செயற்கையாக ஊக்குவிப்பதற்காக போர்த்தளவாடங்களை உற்பத்தி செய்கின்றனர், அவை எல்லாம் கட்டாயம் தேவை என்பதைக் காட்டுவதற்காக இதற்கான சந்தையை உருவக்குவதற்காக பிராந்தியப் போர்களையும் மோதல்களையும் உருவாக்குகின்றனர். இதன் விளைவாக, ராணுவ ஆதிக்கத்திற்கான உக்கிரமான போட்டியாலும் ஆயுத சந்தையை யார் கட்டுப்பாட்டிற்குள் வைப்பது என்ற போட்டியிலும் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, யுகே போன்ற முதலாளித்துவ–ஏகாதிபத்தியங்களுக்குள் தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்கள் தயாரிப்பது உள்ளிட்ட ஆயுத உற்பத்தியில் போட்டி நடைபெற்று வருகிறது. ரோபோடிக்ஸ், தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத அமைப்புகள், ‘பெருந் தரவுகள்’ ஆகியவற்றிற்கு சிறப்பு முக்கியத்துவம் தரப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் ‘மூன்றாவது சமாளிப்பு தந்திரம்’ (Third Offset Strategies) பற்றி பெண்டகன் மிகவும் பெருமையாக அறிவித்ததிலிருந்து இது தெளிவாக தெரிகிறது. இதனைத் தொடர்ந்து ஜூலை 2017இல் சீனா தனது ‘அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவு வளர்ச்சித் திட்டத்தை’ (Next Generation Artificial Intelligence Plan) அளித்தது, அது குடிமக்கள் வாழ்க்கையிலும் அதேபோல் ராணுவத்திலும் செயற்கை நுண்ணறிவை பரிமாற்று தொழில்நுட்பமாக பயன்படுத்துவதில், ‘ராணுவ குடிமக்கள் இணைப்புக்கு’ முக்கியத்துவம் அளிக்கிறது.

மிகவும் லாபகரமான தொழிலை உருவாக்கவல்ல மோவென் என்ற திட்டத்தை பெண்டகன் தொடங்கியதற்கு எதிராக கூகுள் தாய் நிறுவனத்தில் கடுமையான எதிர்ப்பு அந்நிறுவனத்திற்குள்ளேயே எழுந்ததாக பிபிசி மற்றும் நியூ யார்க் டைம்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் திட்டம், அமெரிக்க அரசாங்கத்தின் டிரோன்கள் பிடிக்கும் வீடியோக்களை ஆய்வு செய்வதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதோடு, இது டிரோன்களின் இலக்குகளை மேம்படுத்துவதற்காகவும் ஒட்டுமொத்த நகரத்தையுமே மேற்பார்வையிடவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும். இது இந்த நிறுவனம் மிகமோசமான ஆயுத தாக்குதலுக்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதற்கான முதல் படி என்று அதிருப்தி தெரிவித்த ஆயிரக்கணக்கான நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் எதிர்ப்பு கடிதத்தை வழங்கியதோடு, சில குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆராய்ச்சியாளர்கள் ராஜினாமாவும் செய்தனர். இந்த ஆய்வைத் தொடர்ந்தால் ‘தீயதாக இருக்காதே’ என்ற கூகிளின் அடிப்படை விழுமியங்களையும் நோக்கத்தையும் மீறியதாகுவதோடு இதன் அறநெறி மற்றும் தார்மீக நெறிப் பொறுப்பை கைவிடுவதாகிவிடும் என்றும் அவர்கள் கருதினர். இதன் விளைவாக ‘ராணுவத்திற்கும்’ உளவு ஒப்பந்தத்திற்கும் செயல்படுவதற்கான ‘கோட்பாடுகளை’ வகுப்பதற்கு வழிகாட்டி நெறிமுறைகளை வகுக்கப்போவதாக அந்நிறுவனம் உறுதியளித்தது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் களத்திற்கு முதலாளித்துவ அமைப்பு தனது லாபநோக்க விஷக்கொடுக்கை மிகவும் ஆழமாக எப்படிப் பரப்புகிறது என்பதற்கும் நிபுணர்களுக்கும் அறிஞர்களுக்கும் முற்றிலும் ராணுவமயமாக்கபட்ட பொருளாதாரம் எப்படிப்பட்ட அறநெறி தார்மீக நெறிப் பிரச்சினைகளை உருவாக்குகிறது என்பதற்கும் இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? ஆனாலும் கூட, இப்படி பெரிய எண்ணிக்கையிலான நிபுணர்களும் விஞ்ஞானிகளும் (சில தலைமை நிர்வாகிகளும் கூட) தங்களது தார்மீக அறநெறிப் பொறுப்புணர்வை நிலையாக காட்டியது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும். தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்களைத் தயாரிப்பதால், அது மனிதகுலத்திற்கே மிகப் பெரிய ஆபத்தை விளைக்கக்கூடிய பேராபத்தை விளக்கி பல்வேறு நாடுகளில் அதற்கெதிராக செயற்கை நுண்ணறிவு/ரோபோடிக்ஸ் நிபுணர்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# செயற்கை நுண்ணறிவு – ரோபோடிக்ஸ் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக அறிவியல்சமூகம் பங்குகொள்ளும் ஒன்றுபட்ட மக்கள் போராட்டம் தேவை

*4ம் பக்கத் தொடர்ச்சி*

ஆயிரக்கணக்கானோர் தலைமையில் நடைபெற்ற நீண்ட நெடிய பிரச்சாரத்தின் பயனால் இந்த எதிர்ப்பு நடவடிக்கை எழுந்துள்ளது. செயற்கை நுண்ணறிவு/ரோபோடிக்ஸ் ஆராய்ச்சியாளர்கள் **3978** பேரும், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், புகழ் பெற்ற அறிவுஜீவிகள் உள்ளிட்ட **22541** பேரும் கையெழுத்திட்ட திறந்த மடலில், காலம் கடப்பதற்கு முன்பாக வெடிமருந்து, அணு ஆயுதங்களுக்கு பிறகு போர்த்தளவாடங்களில் மூன்றாவது புரட்சி என்று கூறப்படும் இத்தகைய தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்கள் தயாரிப்பதைத் தடை செய்யும் சர்வதேச ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டும் என்று கோரினர். 'இத்தகைய அமைப்பை (தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்கள்) சட்ட பூர்வமாக இல்லாவிட்டாலும் யதார்த்தத்தில், பத்தாண்டுகள் அல்ல, சில ஆண்டுகளிலேயே உருவாக்கும் நிலைக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது' என்பதை சுட்டிக் காட்டியுள்ள அவர்கள் 'அணு ஆயுதங்களைப் போல தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்களுக்கு அதிக தொகை தேவைப்படவோ அல்லது மூலப்பொருட்கள் கிடப்பது கடினமோ அல்ல, எனவே எல்லா ராணுவ அதிகாரமிக்க நாடுகளும் இவற்றை எளிதாக உடனடியாக பெருமளவு தயாரித்துவிடும்'. 'சிறிது காலத்திலேயே அது கள்ளச்சந்தையில் கிடைப்பதற்கும் தீவிரவாதிகள், சர்வாதிகாரிகள் கைகளில் கிடைப்பதற்கும் வழி உள்ளது'. மனித குலத்திற்கு பல வழிகளிலும் நன்மை பயக்கும் தன்மை செயற்கை நுண்ணறிவுக்கு உள்ளது என்பதை நாங்கள் நம்புகிறோம், அதனால் அதன் நோக்கம் அதற்காகவே இருக்க வேண்டும். ராணுவத்திற்காக செயற்கை நுண்ணறிவு ஆயுதப் போட்டியை தொடங்குவது மோசமான கருத்தாகும், அர்த்தமுள்ள மனிதனின் கட்டுப்பாட்டை மீறி தானாக இயங்கும் பேரழிவு தாக்குதல் ஆயுதங்களை தடை செய்து இதை காப்பாற்ற வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நிச்சயமாக, ஜனநாயக எண்ணம் கொண்ட, அமைதியை – நேசிக்கும் ஒவ்வொருவரும் அவர்களது இந்த பிரச்சாரத்தை வரவேற்று ஆதரிப்பர். ஆனால் இதற்கும் மேல் இதை ஒவ்வொரு நாட்டிலும் கொண்டு சேர்த்து தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்கள் உற்பத்திக்கு எதிராக மக்கள் கருத்தை உருவாக்கி வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவது அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.

இந்த தன்னிச்சையாகச் செயல்படும் ஆயுத எந்திரங்கள் மட்டுமின்றி மற்றொரு அபாயமும் முதலாளித்துவத்தில் வரவிருக்கிறது. உலகம் முழுவதும் பணிப் பாதுகாப்பும், நிரந்தர வேலை என்பது கடந்த காலங்களாகிவிட்டதோடு, எங்கு பார்த்தாலும் ஒப்பந்தம், தற்காலிகப் பணி என்று பணிப்பாதுகாப்பு இல்லாத, எந்த பலன்களும் இல்லாத, அதிக பணிச் சுமைகள் அதிகரித்துவரும் வேலையில் இந்த தானியங்குதல் மக்களுக்கு என்ன விளைவை ஏற்படுத்தும்? ஏற்கெனவே மிகவும் ஈவிரக்கமற்ற சுரண்டலுக்கு ஆளாகி தற்போதைய மோசமான பணிச் சூழல்களால் மக்கள் மூச்சுத் திணறிவருகின்றனர். விண்ணைமுட்டும் வேலையின்மைக்குப் பலியாகி அல்லது அதன் தொடர் அச்சுறுத்தல்களால் பாதிக்கப்படும் மக்களின் துன்ப துயரங்கள் கணக்கிடமுடியாதது. வறுமை, பசி, ஊட்டச்சத்துக் குறைவு அல்லது நோய் என ஆயிரத்தோரு பிரச்சினைகளால் நமது நாட்டில் பல ஆயிரக்கணக்கானோர் வாழ வழியின்றி கடந்த சில பத்தாண்டுகளின் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். எண்ணிலடங்காதோர் உதவியேதுமின்றி, நிராதரவற்றவர்களாக மெல்ல மெல்ல மாண்டு வருகின்றனர், மற்றவர்கள் எப்படியாவது வேலை வேண்டும் என்பதற்காக பெருகிவரும் அடிமை வர்த்தகத்திற்கு பலியாகும் அதே நேரத்தில் ஒரு தரப்பினர் கிரிமினல்களாகிவருகின்றனர். ஆக, தானியங்கியின் வளர்ச்சியால் முதலாளித்துவம் என்ன பலனை இதுவரை மக்களுக்குக் கொடுத்துள்ளது. லாபத்தை அதிகபட்சமாக்குவதற்காக தானியங்கியை அது வேலைகளை விட்டு ஆட்களை வெளியேற்றுவதற்கு பயன்படுத்தியுள்ளது. உதாரணத்திற்கு, ஏற்கெனவே **2016**இல், ஆப்பிள், கூகுள் மற்றும் அமேசான் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்கும் பகாசுர நிறுவனமான பாக்ஸ் கான், **60,000** தொழிலாளர்களை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக ரோபோட்டுகளைக் கொண்டுவந்துள்ளது,

அடுத்த சில வருடங்களில் தானியங்கி வசதியுடன் செயல்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஐடி துறையில் குறைந்த திறமையுள்ள வேலைகளில் **30%–40%** வேலைகள் இல்லாமல் போய்விடும் என்று பல்வேறு நாடுகளின் ஐடி துறைகளின் தலைமை நிர்வாகிகளும் அதிகாரிகளும் ஏற்கெனவே எச்சரித்துள்ளனர். நமது நாட்டிலும் கூட இந்திய தகவல் தொழிநுட்பம் மற்றும் பிபிஓ தொழிற்சாலைகளின் வர்த்தகக் கூட்டமைப்பான நாஸ்காம் அடுத்த **5** ஆண்டுகளில் வேலையிழப்பைத் தடுக்க வேண்டுமானால் **40%** வரையிலான ஐடி ஊழியர்கள் மறு–திறன் வளர்ப்பு அல்லது புதிய தொழிநுட்பங்களைக் கற்க வேண்டும் என்று கூறுகிறது. (டைம்ஸ் ஆஃப் இந்தியா, **09/05/2017**) பிபிஓ அல்லது கால் சென்டர்களில் இந்த வேலையிழப்பு **2020**லேயே தொடங்கிவிடும் என்று கூறப்படுகிறது. ஆனாலும் கூட, மக்களின் மனதைத் தயார்படுத்துவதற்காக புதிய–திறன்களை வளர்ப்பதன் மூலம் எப்படி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம் என்ற பொய் திட்டமிட்டு பரப்பப்படுகிறது. அதோடு கூடவே தானியங்கிகளால் பாதிக்கப்படாமல் இருக்கவும் அதிகமாக சம்பாதிக்கவும் பன்முக திறன்களை எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனைகளும் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. ஒருபுறம் அழகான வளர்ச்சி என்ற பிம்பத்தைக் காட்டுகின்றனர். மற்றொருபுறம் அதே நேரத்தில் வேலைகிடைக்காதோர், மாற்றத்திற்கு ஏற்றவகையில் கடினமாக உழைக்கவில்லை என்றும், தங்களைத் தாங்களே குறைகூறிக்கொள்ள வேண்டும் என்ற செய்தியும் மறைமுகமாக கொண்டு செல்லப்படுகிறது. இப்படியாக முதலாளித்துவம் ஏற்கெனவே சுருங்கியுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் சுருக்குவதற்கான வேலையை ஏற்கெனவே தொடங்கிவிட்டது.

வரும்காலங்களில் பிபிஓ மற்றும் ஐடி துறையில் கணிக்கப்பட்டுள்ள வேலையிழப்பு என்பது ஒரு தொடக்கம்தான். வங்கி, உற்பத்தி, சுரங்கம் மற்றும் சமூக மற்றும் சேவைத் துறைகள் உள்ளிட்ட உற்பத்தியின் அனைத்து களங்களிலும் தானியங்கிகள் தலைகாட்டும். மெக்கின்சே குளோபல் இன்ஸ்டிடியூட் அறிக்கையின் படி, **2030**இல் உள்ள அனைத்து வேலைகளில் குறைந்தது **30%** பணிகள் தானியங்குபவையாகிவிடும், இது **80** கோடி பேரை வேலையிழக்கச் செய்துவிடும். அப்போதும்கூட மக்களின் வேலையை இலகுவாக்குவதற்கு மாறாக, தானியங்குதல் மக்களை வேலையை விட்டு நீக்குவதற்கு பயன்படுத்தப்பட்டால் மக்கள் அழிந்துவிடுவர்.

ஆனால் வெறுமனே சிலரின் லாபத்திற்காக பொதுமக்களை பலிகடா ஆக்குவதை அனுமதிக்கக் கூடாது. சமுதாயத்தின் நோக்கம் மக்களுக்கு வேலைகளை உருவாக்குவதாக இருக்க வேண்டும்; ஆதாயமான வேலையை அவர்களுக்கு எப்படி வழங்குவதை என்பதை நோக்கியே அனைத்து முயற்சிகளும் இருக்க வேண்டும்.

இன்று செயற்கை நுண்ணறிவிலும் ரோபோடிக்ஸிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள மகத்தான சாதனைகள் மனித நாகரீகத்தின் நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தும் வாய்ப்பு மிகவும் பிரகாசமாக உள்ள நிலையில் இதற்கு மாறாக இதன் பயன்களை லாபத்திற்காக மக்களை பலியிடுவதற்கும், அடிமைகளாக்குவதற்கும், சித்திரவதைப்படுத்தவும் நசுக்குவதற்கும் சமூக முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தவும் முதலாளித்துவம் முயற்சிக்கிறது.

எந்த குழப்பமும் வேண்டாம்: செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸில் ஏற்பட்டுள்ள சீரான வளர்ச்சியால் தானியங்கியை அதிகப்படுத்துவதில் பிரச்சினை அல்ல, பாடுபடும் மக்களைச் சுரண்டி அவர்களது வாங்கும் சக்தியை பிழிவதன்மூலம் உற்பத்தி சாதனங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வெகுசில முதலாளிகளின் அதிகபட்ச லாபத்தை உத்திரவாதப்படுத்துவதை சுற்றியே ஒட்டுமொத்த முதலாளித்துவ உற்பத்தி முறையும் இயங்குவதால் மக்களின் நலனுக்கும், உயிர்வாழ்தலுக்கும் காலாவதியாகிப்போன முதலாளித்துவம்தான் பிரச்சினை. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உற்பத்தி சக்திகளின் அளப்பரிய வளர்ச்சிக்கும் மாறாமல் தேங்கிக்கிடக்கும் முதலாளித்துவ உற்பத்தி உறவுமுறைகளுக்கும் இடையிலான தீர்க்கவியலா முரண்பாடு சமூகத்தின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து அதற்கு தடையாக இருக்கும் என்பதற்கு எப்படிப்பட்ட மற்றுமொரு உதாரணம்?

சமூக வளர்ச்சி விதிகளுக்கு ஏற்ப பொருளாதார அமைப்பின் உற்பத்தி உறவு முறைகளின் புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற கூக்குரல் எழும்போது இது மாற்றப்புள்ளியை அடையும். சமூக வளர்ச்சியின் இந்த விதியைத்தான், அதாவது அடிமை சமுதாயத்திலிருந்து நிலப்பிரபுத்துவத்திற்கு, அதன் பின் முதலாளித்துவத்திற்கு பின் அங்கிருந்து சோசலிசத்திற்கு என வரலாற்றுப் போக்கில் ஒரு அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்பிற்கு மாற்றம் ஏற்படும் சமூக மாற்றத்தின் விதியைத்தான் மார்க்ஸ் கண்டறிந்து கூறினார். ஆக செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அளப்பரிய வளர்ச்சிய தவறாகப் பயன்படுத்துவதன் அபாயத்திலிருந்து விடுபடுவதற்கான இறுதித் தீர்வு காலாவதியாகிப்போன அமைப்பைத் தூக்கியெறிந்துவிட்டு அதற்குப் பதிலாக சோசலிசத்தை நிறுவுவதில்தான் உள்ளது. அது மட்டும்தான் முதலாளித்துவத்தின் லாப நோக்கம் என்ற நச்சுக் கொடுக்குகளிலிருந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை விடுவித்து தங்குதடையற்ற சமூக முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் இதன் முழுமையான பலனை உத்திரவாதப்படுத்தும்.

இது வெறுமனே கருத்தியல் மட்டுமல்ல என்பதை ஒட்டுமொத்த சமூகத்திலும் தொடர்ந்து அதிகரித்து வரும் பருப்பொருள் மற்றும் கலாச்சாரத் தேவைகளை அதிகபட்சம் பூர்த்தி செய்யவேண்டும் என்பதை உற்பத்தியின் நோக்கமாகக் கொண்டு செயல்படும் சோசலிசத்தில் மக்களின் ஒவ்வொரு வாழ்க்கைக் களத்திலும் மாபெரும் மேம்பாடுகளையும் முன்னேற்றங்களையும் அளித்ததன் மூலம் நிரூபிக்கப்பட்டது. ஆக தொடர்ச்சியாக உற்பத்தி விரிவுபடுத்தப்படுவதன் மூலம், உயர் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உற்பத்தி செம்மைப்படுத்தப்படும் செயல்முறைப்போக்கில் சோசலிச பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எந்த அளவிற்கு இருந்ததென்றால் மாபெரும் ஸ்டாலின் இறப்பதற்கு முன்பாகவே செயற்கை நுண்ணறிவும் தானியங்குதல் என்ற பெயரே அறியாத காலகட்டத்தில் ஒவ்வொருவருக்கும் பல்தொழில்நுட்ப கல்வி வழங்குவதை அறிமுகப்படுத்தி வேலை நேரத்தை **6** மணியிலிருந்து **5** மணி நேரமாகக் குறைத்து இரட்டிப்பு சம்பளமும் வழங்கப்பட்டது.

சில பலஹீனங்களைப் பயன்படுத்திக்கொண்ட கம்யூனிச இயக்கத்திற்குள்ளேயே இருந்த துரோகிகள், திருத்தல்வாதத்தை கட்டவிழ்த்துவிட்டதால் சமூகம் பின்னடைவைச் சந்தித்து அது இறுதியில் எதிர் புரட்சிக்கு இட்டுச் சென்று முதலாளித்துவம் மீண்டும் அங்கு நிர்மாணிக்கப்பட்டாலும், இந்த உண்மையை மாற்றிட முடியாது.

மனிதகுலம் எதிர்நோக்கும் அபாயத்திற்கு இறுதித் தீர்வு எட்டுவதில்தான் இது உள்ளது என்ற போதிலும், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸின் அற்புதமான வளர்ச்சிகளை தவறாக மோசமாகப் பயன்படுத்துவதற்கு எதிராக உலகம் முழுவதும் பொதுமக்கள் கருத்தை உருவாக்கி, காலமும் சூழ்நிலைமைகளும் கோருகின்றபடி மக்களை ஒன்றிணைத்து இதற்கெதிரான போராட்ட இயக்கத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும் ■

## இறக்குமதி வரிப்போர்

# இறக்குமதி வரிப்போர் ட்ரம்ப் நிர்வாகத்தை தனிமைப்படுத்திவிட்டது

1ம் பக்கத் தொடர்ச்சி

களுக்கு பெரும் வரிச்சலுகையை வழங்கத் தவறவில்லை. இதுபோன்ற இன்னும் பிற வாதங்களும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் கார்களுக்கு வரிவிதிப்பு என்பது, நாஃப்டா பேச்சு வார்த்தையின்போது (NAFTA - North American Free Trade Agreement) சலுகைகளைக் கேட்டு நிர்ப்பந்திப்பதற்காக மெக்சிகோ மீது தரப்படும் அழுத்தமாகும். ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெறக் காரணமாக இருந்த 'சட்டவிரோத குடியேறிகள் அமெரிக்கர்கள் வேலையிழக்கக் காரணமாயிருக்கின்றனர்' எனும் அவரது மற்றுமொரு விருப்பமான கோஷத்தை இங்கே நினைவுபடுத்திப் பார்க்கலாம். அதனால்தான் அவர் மெக்சிகோ மீது குறிவைத்தார்.

அத்துடன் ட்ரம்ப் நீண்டகாலத்திற்கு முன்பே உறுதியளித்த 60 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள சீனப் பொருட்களுக்கு கடும் அபராதம் விதிக்கும் நடவடிக்கையைத் துவங்க முற்பட்டார். ஜுலை மாதம் 6 ஆம் நாள், 34 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள சீன இயந்திரங்கள் மற்றும் இன்னும் பலவற்றுக்கு 25% வரியை ட்ரம்ப் நடைமுறைப் படுத்தியதுடன், இன்னும் பலநூறு பில்லியன் டாலர்கள் மதிப்பிலான சீனப் பொருட்களுக்கு வரிவிதிக்கும் இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அச்சுறுத்தினார். இதற்கு உடனடியாகப் பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என சீனா எச்சரித்தது. உண்மை விஷயம் என்னவாக இருந்ததெனில், முப்பது ஆண்டுகால சோசலிசப் பின்னணியின் காரணமாக உற்பத்திச்செலவு குறைவாக இருந்ததால், அதே வகைத் தரத்திலான சீனப் பொருட்கள் சந்தையில் மலிவாக காணப்பட்டன.

இவ்வாறாக, அமெரிக்கச் சந்தையானது இறக்குமதி செய்யப்பட்ட சீனப் பொருட்களால் நிரம்பி வழிந்ததுடன், சீனாவுடனான அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை ஏறத்தாழ 375 பில்லியன் டாலர்களாக அதிகரித்தது. அதாவது இது அமெரிக்காவின் மொத்த வர்த்தகப் பற்றாக்குறையில் கிட்டத்தட்ட 66% ஆகும். அத்துடன் சீனா சந்தைப்போட்டியில் மேலாதிக்கத்தை தட்டிப்பறிக்கும் நேர்மையற்ற நோக்கத்தோடு, ஒரு தனித்துவத்துடன்கூடிய, அரசு வழிநடத்திய, பெரும் மானியத்துடனான தொழில் கொள்கையை அறிமுகப்படுத்தியது என்றும் குற்றச்சாட்டப்பட்டது.

பிற நாடுகளிலிருந்து, குறிப்பாக அமெரிக்காவிடமிருந்து சட்டவிரோதமாக அறிவுசார் சொத்தை (Intellectual Property) திருடியது உள்ளிட்ட இணையதள உளவு வேலையை சீனா பார்த்தது என்பதுதான் அமெரிக்காவைப் பொருத்தமட்டில் சீனாவுக்கெதிரான மூன்றாவது குற்றச்சாட்டாகும். எப்போதுமே சட்டத்திற்குக் கட்டுப்படாமல் மாறாக, ஏகாதிபத்தியவாதிகளின் அனைத்து முறைகேடுகளையும் நடைமுறைப்படுத்தும் மற்ற அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளைப் போலவே, சீனாவும் இப்போது போதிய பொருளாதார பலத்துடனான, மேலாதிக்க ஆவல்கொண்ட, முழுமையாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடாகி, அவர்களும் உலக முதலாளித்துவ சந்தையில் கடுமையான போட்டியாளர்களாக இருக்கின்றனர் என்பதை இங்கே நாம் பார்க்கத் தவறக்கூடாது. பின்னர் முதலாளித்துவ–ஏகாதிபத்தியவாதிகளில் இதனைச் செய்யாதவர் எவர்? கேம்பிரிட்ஜ் அனாலிடிகா மற்றும் ஃபேஸ்புக் ஆகியவை உலகம் முழுவதும் தகவல்களைத் (Data) திருடியிருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருப்பதையும் அதற்காக அமெரிக்காவின் மிகப்பெரும் கார்ப்பொரேட் நிறுவனத்தின் தலைவரான சுக்கர்பெர்க் என்பவர் மக்கள் முன்பாக மன்னிப்பு கேட்கவேண்டியிருந்தது என்பதையும் கண்டு உலகமே அதிர்ச்சிக்குள்ளாகி இன்னும் மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை. ஆனால், இதே அமெரிக்கா 'திருடிவிட்டனர்' என பிறரைக் குற்றஞ்சாட்டிட பெருத்த சத்தமிட்டுக் கொண்டிருக்கிறது! சபாஷ்!

சமீபத்தில்தான் யுஎஸ்ஏ, யுகே, ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, ஜப்பான் மற்றும் இத்தாலி போன்ற முதல் ஏழு ஏகாதிபத்திய நாடுகளின் 44வது ஜி 7 உச்சி மாநாடு ஜுன், 2018 8 முதல் 9 தேதிகளில் கனடாவிலுள்ள கியூபெக்கில் நடைபெற்றது. அதில் உலகின் முன்னணி ஏகாதிபத்திய சக்திகளுக்கு மத்தியிலான பரஸ்பர முரண்பாடுகள் எந்த அளவிற்கு சென்றடைந்திருக்கின்றன என்பதும், முதலாளித்துவ நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உத்தியில் முன்னணி முதலாளித்துவ நாடுகள் எவ்வளவு தீவிரமாக பிளவுபட்டு நிற்கின்றன என்பதும் அம்பலப்பட்டுப்போக வெகுநேரம் ஆகவில்லை. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இறக்குமதி வரி நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும், அமெரிக்கப் பொருட்களுக்கான விலைகளை கடுமையாகக் குறைத்திடவும் அல்லது இறக்குமதி வரியை நீக்கவும் ஒத்துக்கொள்ளாத பிறநாடுகளுக்கு கடினமான அபராதத்தை விதிக்கச் சட்டமியற்ற வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் ஆரவாரமாகக் கூறினார். "அவர்கள் பதிலடி தந்தார்களேயானால், அவர்கள் தவறு செய்கின்றனர்" என அவர் சவால் விட்டார். அத்துடன் "நாங்கள் உண்டியல் வங்கிபோல இருப்பதால் யாவரும் கொள்ளையடிக்கின்றனர்" என்றும் கூறினார். அது இனிமேல் நடக்காது.

"நாஃப்டாவைப் போலவே இது மோசமானது" என அமெரிக்காவே உருவாக்கிய நேடோ அமைப்பை அவர் தாக்கிப்பேசிக்கொண்டு, "வணிகத்தில் எங்களை துடைத்தெறிந்த" நாடுகளைப் பாதுகாத்திட, "நேடோவின் கிட்டத்தட்ட ஒட்டுமொத்த செலவையும்" அமெரிக்காவே ஏற்று எனக்கூறி, அவர் விஷத்தை உமிழ்ந்தார். "அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பை காப்பாற்றிட", தொழிலாளர்களின் வேலைகளைப் பாதுகாத்திட இறக்குமதி வரிகளானது அத்தியாவசியமானது என்ற வாதத்தை முன்வைத்து, வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் ராணுவச் செலவு என்ற விஷயத்தை தொடர்பு படுத்திப் பேசத் தீர்மானித்தே ட்ரம்ப் ஜி 7 உச்சி மாநாட்டிற்கு வந்தது தெளிவாகத் தெரிகிறது.

அமெரிக்காவானது ஜி 7 கூட்டமைப்பிலிருக்கும் அதன் தீவிர கூட்டாளிகளிடமிருந்து தனிமைப்பட்டு நிற்கின்றது என்பதை நடந்த எதிர்வினைகள் (Reactions) தெளிவாகக் கோடிட்டுக் காண்பிக்கின்றன. ஜெர்மனியின் அதிபர் ஏஞ்ஜெலா மெர்க்கெல் யார், யாரை துடைத்தெறிந்தனர் என்ற கேள்வியை முன்வைத்து ட்ரம்பை இழுத்துப்பேசி, "மீண்டும் மீண்டும் நாங்கள் துடைத்தெறியப்பட அனுமதிக்க மாட்டோம். பின்னர் நாங்களும்கூட பதிலடி தருவோம்" எனக் கூறினார். பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் பேசுகையில், "சர்வதேச ஒத்துழைப்பை கடுங்கோபப்பேச்சு மற்றும் மலிவான வார்த்தைகள் மூலம் திணிக்க முடியாது" என கடுமையாகப் பேசினார். சில சமயங்களில் "கொஞ்சம் வெளிப்படையான விவாதங்கள் நடைபெறும்" இத்தகைய "சிக்கலான உச்சி மாநாட்டுக்கு" கனடாவின் பிரதமர் ஜஸ்டின் த்ருடோ திறமையாகத் தலைமை வகித்தமைக்காக தனது "குறிப்பிட்ட பாராட்டுரையை" மிகக்கவனமாக யுகேயின் பிரதமர் தெரசா மே, வழங்கினார். அதிகாரபூர்வ கூட்டறிக்கையில் ஒத்துக்கொள்ளப்பட்ட விஷயங்களுக்கு யுகே மதிப்பளிக்கும் என அவர் உறுதியளித்தார்.

ட்ரம்ப்பின் நடவடிக்கையைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே நிலவும் வர்த்தகச் சூழலை "மறு சமன்" (Rebalance) செய்திட பதில் கொள்கைகள் எடுக்கப்படும் என ஐரோப்பிய கமிஷனின் தலைவர் ஜீன்கிளாட் ஜுன்கர் சூசகமாகத் தெரிவித்தார். தொகுப்பாளரான கனடா பிரதமர் ஜஸ்டின் த்ருடோ உச்சிமாநாட்டுக்குப் பின்னர் நடந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில், இரும்பு மற்றும் அலுமினியத்திற்கு அமெரிக்கா விதித்திருக்கும் இறக்குமதி வரிக்கு எதிரான தனது எதிர்ப்பை உறுதிபடத் தெரிவித்ததுடன், ஜுலை 1ஆம் தேதியன்று பதிலடி நடவடிக்கைகளை மேற்கொள்ள அழுத்தம் தரப்போவதாக உறுதியாகக் கூறினார். அமெரிக்க பிரதிநிதியை அந்த அதிகாரபூர்வ கூட்டறிக்கையில் கையொப்பமிட வேண்டாமென ட்ரம்ப் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. கடைசியில் ஜி 7 கூட்டமைப்பு ஜி 6 + 1 என ஆகிவிட்டது.

இது வெறும் வார்த்தைப் போராக இருக்கவில்லை. அமெரிக்கா ஏற்கெனவே செயல்படத் துவங்கிவிட்டது. ஜி 6 + 1 உச்சி மாநாடு பிற நாடுகளை செயல்படத் துவங்கச் செய்துவிட்டது. 13 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான அமெரிக்கப் பொருட்களுக்கு கனடா புதிய இறக்குமதி வரியை அறிவித்தது. ஐரோப்பிய ஒன்றியம் 300 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான அமெரிக்க கார் இறக்குமதிக்கான இறக்குமதி வரியை அறிவிக்கப்போவதாக அச்சுறுத்தியது. கடந்த ஆண்டு மெக்சிகோ 19 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான அமெரிக்க பண்ணைப் பொருட்களைக் குறைத்து வாங்கப் போவதாக அச்சுறுத்தி, அமெரிக்க விவசாயிகளைக் கவலைப்படவைத்து அதிருப்திக்குள்ளாக்கியது. மார்ச், 23 அன்று பெய்ஜிங் 3 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான 128 அமெரிக்க இறக்குமதிப் பொருட்களுக்கு பதிலடி இறக்குமதி வரித் திட்டத்தை அறிவித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிரட்டலும் பிற நாடுகளின் பதிலடி நடவடிக்கைகளும் குறைவதற்குப் பதிலாக தொடர்ந்துகொண்டேயிருந்தது. ஜுன் மாதம் 25 அன்று, தற்போது ஈரானுக்கு விரோதமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அமெரிக்கா, ஈரான் நாட்டிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ளுமாறும், இல்லாவிட்டல் பொருளாதாரத் தடைகளைச் சந்திக்க நேரிடும் எனவும் இந்தியா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளையும் கடுமையாக எச்சரித்துள்ளது. ஒபெக் நாடுகளை (OPEC - Oil Producing and Exporting Countries) அமெரிக்கா கையாளுகின்ற விதம், ஒபெக் நாடுகளுடனான மற்றும் ரஷ்யாவுடனான எண்ணைப் போருக்கு இட்டுச்செல்லும் என 4, ஜுலை, 2018 தேதியிட்ட பிசினஸ் அன்ட் ஃபினான்ஸ் பத்திரிகை அச்சம் தெரிவித்திருக்கிறது.

இந்திய மற்றும் அமெரிக்க சக்திகள் ஒன்றுக்கொன்று சுமூகமாக செயல்படுவதற்கு உதவிகரமாக, ரஷ்ய ராணுவத் தளவாடங்களை இந்தியா சார்ந்திருப்பதை குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் ராணுவ ஏவுகணைகளை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதை இந்திய நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. பதிலடியாக இந்தியா இறக்குமதி வரியை உயர்த்தி, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 29 அமெரிக்கப் பொருட்களுக்கு சுங்க வரியைக் கூட்டி அறிவித்துள்ளது. சீனாவுடன் இந்தியா கைகோர்த்துக் கொண்டு, அமெரிக்காவின் பாதுகாப்புவாதத்தை விமர்சித்ததுடன், டாவோசில் நடைபெற்ற உலகப் பொருளாதார அமைப்பு (World Economic Forum) மாநாட்டில் உலகமயமாக்கலுக்காக வேண்டுகோள் விடுத்துள்ளது. நியாயமற்ற முறையில் தங்களின் ஏற்றுமதி வியாபாரங்களில் மானியத்தை வழங்கியிருக்கிறது என சீனாவை குற்றம் சுமத்தியிருப்பது போன்றே இந்தியாவையும் பதிலுக்கு அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அத்துடன், வரவிருக்கும் தொழில்நுட்பத்துறைக் களத்தில், இணையதள ரீதியில் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு உலகம் எனும் கருத்து உடைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. தொழில்நுட்பப் பாதுகாப்பு வாதத்திற்கான ஆதரவு பெருகிக்கொண்டு, பல்வேறு ஏகாதிபத்திய–முதலாளித்துவ நாடுகள் தங்களின் மேலாதிக்கத்திற்காகப் போட்டியிட்டுக்கொண்டும் அல்லது குறைந்தது சந்தையைக் கட்டுப்படுத்த தங்களால் முடிந்த ஏதாவதை செய்துகொண்டும் உள்ளன. சமூக ஏகாதிபத்திய சீனாவும் இதில் தனது பலத்தைக் காட்டிக்கொண்டிருக்கின்றது. சீன அரசாங்கம் ஏற்கெனவே கூகுல் மற்றும் ஃபேஸ்புக் (Google and Facebook) போன்ற அந்நிய நிறுவனங்களைத் தடை செய்து, அவர்களின் சீனப்போட்டி நிறுவனங்களுடன் இணைந்துக்கொள்ளுமாறு பிற நிறுவனங்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இறுதியில், இணையதளத்தில் மட்டுமின்றி, உலகளாவிய தொழில்நுட்பத்துறையிலும் தனது மேலாதிக்கத்தைச் செலுத்தும் நோக்கத்தில், தங்களின் சொந்த வணிக அடையாளத்துடன், விதிகளுடன் மற்றும் கலாச்சாரத்துடன்கூடிய, தீவிர கண்காணிப்புமிக்க மாற்று இணையதள முறையை ஏற்கெனவே உருவாக்கிவிட்டது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## இறக்குமதி வரிப்போர்

# பொருளாதாரவாதிகள், ஊடகங்கள் மற்றும் குடியரசுக்கட்சி செனட்டர்கள்கூட அமெரிக்காவின் இறக்குமதி வரியை எதிர்த்து நிற்கின்றனர்

6ம் பக்கத் தொடர்ச்சி

ஐரோப்பிய ஒன்றியமும்கூட, ஃபேஸ்புக் போன்ற அமெரிக்காவின் கார்ப்பொரேட் ஜாம்பாவான்களுக்கும் மற்றும் சீனாவின் முயற்சிகளுக்கும் எதிராக வடிவமைக்கப்பட்ட புதிய தகவல் பாதுகாப்பு விதிகளை விதித்திருக்கிறது. தனது சொந்த ஐரோப்பிய நிறுவனங்களுக்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுக்க ஒரு புதிய இணையதள சந்தையை ஏற்படுத்திடவும் எண்ணிக்கொண்டிருக்கின்றது. சில அரபு நாடுகளும்கூட வாட்ஸப் (Whatsapp) போன்ற அந்நிய சேவையைத் தடை செய்திருக்கிறது. ரஷ்யா, பிரேசில் மற்றும் இன்னும் சில நாடுகள் அந்நிய சேவைகளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவுமான வழிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பத்தின் 'உலகளாவிய வலைப்பின்னல்' ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

அச்சு ஊடகத்தின் ஒரு முன்னணிப் பிரிவினர் தேசிய எல்லைகளைக் கடந்து இறக்குமதி வரிப்போரை எதிர்த்துக்கொண்டிருந்தனர். ஸ்மூட்–ஹேலி இறக்குமதி வரிச் சட்டம் மூட்டிவிட்ட 20ஆம் நூற்றாண்டின் ஆக முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகப் போரானது, 60% சர்வதேச வர்த்தகத்தைக் குறைத்துள்ளது எனவும், கேள்விக்கிடமின்றி அது மாபெரும் மந்தநிலையின் (Great Depression) கஷ்டங்களை மோசமடையவைத்துக்கொண்டும் நீட்டித்துக்கொண்டும், நாசிகளின் (Nazis) எழுச்சிக்குக் காரணமாகவும்கூட இருந்தது எனவும் பால் க்ருக்மேன் என்ற பொருளாதாரவாதி கூறியதாக, ஜுன் 17 தேதியிட்ட தி நியூ யார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது. மேலும் அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரியாலும் அவைகளுக்கான எதிர்வினையும் 70 சதவீத சர்வதேச வர்த்தகத்தைக் குறைக்கும் எனவும் அவர் மதிப்பிட்டிருந்தார். பெஞ்சமின் எரிக் சசே எனும் குடியரசுக் கட்சியின் (Republican Party) செனேட்டர், டெரிபிள்டேரிஃப்ஸ்.காம் (Terrible tariffs.com) எனும் வளைதளத்தில் "எந்த வர்த்தகப் போரும் ஒருபோதும் பயனளித்ததில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார்.

குடியரசுக்கட்சியின் 107 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ட்ரம்பின் வர்த்தகப்போருக்கும் பயங்கரமான இறக்குமதி வரிக்கும் ஒப்புதல் தர "முடியாது" எனக்கூறி, அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பாதுகாப்போம் என உறுதிமொழியளித்த ஒரு கடிதத்தில் கையொப்பமிட்டிருக்கின்றனர். 2018 ஏப்ரல் மாதம் யூகேயின் கார்டியன் பத்திரிகை, சந்தைகள் எதிர்வரும் ஆபத்தை நோக்கி எச்சரிக்கையாக இருந்தன என்று அறிவித்திருந்தது. மே, 8 தேதியிட்ட தி எக்கனாமிஸ்ட்ஸ் பத்திரிகை, அமெரிக்க நிறுவனங்கள் குறித்து கவலை தெரிவித்திருந்தது போலவே, ஜுலை 3 தேதியிட்ட ஒர்க்கர்ஸ் வேர்ல்டு பத்திரிகையானது, அறிவிக்கப்பட்டிருக்கும் இறக்குமதி வரிகளின் காரணமாக "குறைவான முதலீடு, மிகக்குறைந்த வேலைவாய்ப்பு மற்றும் குறைவான ஊதியம்" நிலவுகிறது என 28, ஜுன் தேதியில் ஜெனரல் மோட்டார்ஸ் அச்சம் தெரிவித்திருந்ததை மேற்கோளிட்டுக் காட்டியிருந்தது. அத்துடன், ஏற்கெனவே தொழிலாளர்களைக் குறைக்கத் துவங்கிக்கொண்டிருக்கும், மலிவு விலை இறக்குமதி செய்யப்பட்ட உலோகங்களை பயன்படுத்திக்கொண்டிருக்கும் ஆணி உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் நஷ்டமடைவதுடன், அவை ஆலையை மூடும் நிலைக்குச் செல்லலாம் என்றும் குறிப்பிட்டிருந்தது. ஹார்லி–டேவிட்சன் என்ற பிரபல மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியத்தின் பதிலடி இறக்குமதி வரியைத் தவிர்ப்பதற்காக, அதன் பெரும்பான்மையான உற்பத்தியை மெக்சிகோவிற்குக் கொண்டுசெல்வதாக அறிவித்திருக்கிறது. மொத்தத்தில், ட்ரம்பின் வாதத்தை தவறானது எனக்கூறி, விலைவாசி உயர்ந்து, குறிப்பாக பணி ஓய்வு பெற்றவர்களையும் நிலையான வருமானம் ஈட்டும் பிரிவினரையும் கடுமையாகப் பாதிக்கும் என (Workers World) டபிள்யூ டபிள்யூ கூறுகிறது.

### இதன் ஆணிவேர் முதலாளித்துவத்தின் தீவிர சந்தை நெருக்கடியில்தான் இருக்கிறது

இயற்கையாகவே தோன்றக்கூடிய கேள்வி இதுதான். முதலாளித்துவ–ஏகாதிபத்திய உலகிற்கு என்னவாயிற்று? முதலாளித்துவ நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான தீர்வு நடவடிக்கைகளாக உலகம் முழுவதும் கொண்டுவரப்பட்ட உலகமய–தாராளமய–தனியார்மயம் என்கின்ற ஆரவார விளம்பரம் எங்கு மறைந்துபோனது, ஏன் மறைந்து போனது? அடுத்தடுத்து நடந்துகொண்டிருக்கும் தற்போதைய நிகழ்வுகள், அதற்கான பதில் முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்தில் இல்லை என்பதைத்தான் வெளிப்படுத்துகின்றன. உலகமயமாக்கலுக்கு ஆதரவாக வாய்கிழியப் பேசிக்கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது புதிய இறக்குமதி வரிகளைச் சுமத்துவதைப்பற்றிப் பேசுவதால், பிற நாடுகள் இதை எதிர்க்கின்றன. மற்றொருபுறம், உலகமயமாக்கலுக்கான உரத்த குரலை எழுப்பிக்கொண்டிருக்கும் இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் மீது நியாயமற்ற தடைகள் விதிக்கப்பட்டிருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

பெரிய அல்லது சிறிய, எந்த முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடாக இருப்பினும், அவைகளின் இத்தகைய நம்பகமற்ற இரட்டைவேட உத்திகளை முழுமையாகப் புரிந்துகொள்ளவேண்டுமானால், முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளனைத்தும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒரு பயங்கரமான நெருக்கடி வெறித்துப்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு பொதுவான சூழலில்தான் உள்ளன எனும் உண்மையை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். அதேநேரத்தில், இத்தகைய முதலாளித்துவ–ஏகாதிபத்திய சக்திகள் அவைகளின் மாபெரும் மந்தநிலையின் பயங்கரமான நெருக்கடியிலிருந்து மீளவும், சந்தையை அபகரிக்கவும், பிற நாடுகள் மீது மேலாதிக்கம் செலுத்தவும் இரண்டு உலகப் போர்களை நடத்தின என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் அவைகள் நினைத்ததற்கு மாறாக அதிர்ச்சிதரும் வகையில், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், உலக முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து மூன்றில் இருபகுதி நாடுகள் விடுபட்டதுடன், அவைகள் ஒரு சோசலிச முகாமை ஏற்படுத்தின. ஏகாதிபத்தியவாதிகளின் முதலாளித்துவச் சந்தை பரிதாபகரமாகச் சுருங்கியதுடன், நெருக்கடி இரட்டிப்பாகிப்போனது.

இப்பின்னணியில், விரிவான விளக்கத்திற்குச் செல்லாமல், முதலாளித்துவம் தவிர்க்கவியலாமல் எப்படி சந்தை நெருக்கடியை உருவாக்குகின்றது என்பதைக் காட்டிட ஒரு சில வார்த்தைகளைக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும். உழைப்பானது செல்வத்தை, அதாவது மதிப்பை உருவாக்குகின்றது எனக்கூறிய பண்டைய பொருளாதாரத்திற்கு அப்பால் சென்று பார்த்தோமேயானால், மார்க்ஸ் அவர்கள், முதலாளித்துவத்தில் உழைப்பானது தவிர்க்கவியலாமல் உபரி மதிப்பை உருவாக்குகிறது என்பதைச் சுட்டிக்காண்பித்தார். முதலாளித்துவ உடமையாளர், செல்வத்தின் ஒரு வடிவமாக இருக்கின்ற அவரது மூலதனத்தை பயன்படுத்துகின்ற போக்கில், குறைந்த நேரத்திற்கான ஊதியத்தை வழங்கி, அதாவது 8 மணி நேர உழைப்புச் சக்தியை வாங்கிக்கொண்டு, ஆனால் தொழிலாளி உயிர்வாழ்வதற்கு போதுமானது என அவர் கருதுகின்ற 4 மணி நேரத்திற்கான ஊதியத்தை வழங்கி, எவ்வாறு தொழிலாளியிடமிருந்து குறிப்பிட்ட அளவிலான உழைப்புச் சக்தியை வாங்குகிறார் என்பதைச் சுட்டிக்காண்பித்தார். மீதமுள்ள 4 மணி நேரமானது, தொழிலாளிக்குக் கூலி வழங்கப்படாத, ஆனால் முதலாளியின் மூலதனத்தில் குவிகின்ற, உபரி மதிப்பை உருவாக்குகின்ற உபரி உழைப்பைப் பிரதிபலிக்கிறது. இதில் பல விஷயங்கள் அடங்கியுள்ளது.

முதலாவதாக, முதலாளிகள் அன்றி, தொழிலாளர்கள்தான் அவர்களின் உழைப்புச் சக்தியின் உதவிகொண்டு மூலதனத்தை உருவாக்குகிறார்கள் என்பதை இது சுட்டிக்காண்பிக்கிறது.

இரண்டாவதாக, முதலாளிகளின் லாபமாகவும் மூலதனமாகவும் சேர்கின்ற உபரி உழைப்பையும் அது உருவாக்குகின்ற மதிப்பையும் முதலாளிகள்தான் அபகரிக்கின்றனர்.

மூன்றாவதாக, முதலாளித்துவச் சந்தையில் பொருட்களை வாங்குபவர்களாக இருக்கக்கூடிய, வெளிப்படையாக எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கும் தொழிலாளர்களுக்கு இவ்வாறாக அவர்களின் உரிய ஊதியம் மறுக்கப்படுகிறது. இதுதான் முதலாளித்துவச் சுரண்டலாகும்.

நான்காவதாக, தொழிலாளர்களுக்கு, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிய ஊதியத்தை விடக் குறைவாகக் கொடுக்கப்படுவதால், அவர்களுக்குத் தேவைப்படும், அல்லது அவர்கள் வாங்க விரும்பும் அனைத்துப் பொருட்களையும் அவர்களால் வாங்கமுடியாது. உயிர்வாழ்வதற்குத் தேவையானதைப் பெறுவதற்கே அவர்கள் படாத பாடு படவேண்டியிருக்கிறது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

## ஜுலை 19, 2018: அகில இந்திய கண்டன நாள்

# 1ஆம் வகுப்பு முதல் பாஸ்–ஃபெயில் முறையை மீண்டும் அமுல்படுத்தக் கோரி நாடு முழுவதும் போராட்ட இயக்கங்கள் நடைபெற்றன




சென்னை




மதுரை



புதுச்சேரி

## இறக்குமதி வரிப்போர்

# சந்தை நெருக்கடியைத் தீர்த்திட பிரச்சாரம் செய்யப்பட்ட உலகமயமாக்கல் திட்டம் நெருக்கடியை மேன்மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது

7ம் பக்கத் தொடர்ச்சி

ஆக, சந்தையில் இது நெருக்கடியை ஏற்படுத்துகிறது. பொருட்களை வாங்குவதற்கான, போதுமான வாங்கும் சக்தியில்லாமல், வாங்குபவர்கள் கிடைக்காததால், பொருட்கள் விற்கப்படாமல் தேங்கிவிடுகின்றது. போதுமான உற்பத்திப் பொருட்கள் இருந்த போதிலும், சந்தை சுருங்குகிறது. அத்தகைய பொருட்கள் மக்களுக்குத் தேவைப்பட்டாலும் அவர்களால் அவற்றை வாங்க முடியாது. முதலாளித்துவத்தால் தவிர்க்க இயலாத சந்தை நெருக்கடி இதுதான். இதைத்தான் உலகபோர் வெடித்த பல பத்தாண்டுகளுக்கு முன்னர், 170 வருடங்களுக்கு முன்பாக வெளியான அவர்களின் புகழ்பெற்ற படைப்பான கம்யூனிஸ்ட் அறிக்கையில் 'அளவுக்கதிக உற்பத்தியின் கூடவே இருக்கும் நோய்' என பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களான மார்க்ஸ் அவர்களும் ஏங்கெல்ஸ் அவர்களும் நிலைநிறுத்தினார்கள்.

நெருக்கடி ஆழமாகிக்கொண்டு வருவதால், முதலாளிகள் நெருக்கடியில் சிக்கியிருக்கும் சந்தையிலிருந்து அதிகபட்ச லாபத்தைக் குவித்திட அதிக ஆசைப்படுகின்றனர். அதன் காரணமாக அவர்கள் தொழிலாளர்களை அதிகமாகச் சுரண்டுகின்றனர். இந்த ஈவிரக்கமற்ற சுரண்டல், அவர்களின் வாங்கும் சக்தியை மேலும் பறிப்பதால், சந்தையில் விற்கப்படாத பொருட்கள் அதிகமாகத் தேங்கி, தொழிற்சாலைகள் மந்தமடைந்து, இன்னும் கடுமையான சந்தை நெருக்கடி வேரூன்றிவிடுகிறது.

குறைந்தபட்சம் தொழிலாளர்களின் ஒரு பிரிவினருக்கு, அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் முதலாளிகளின் 'லாபப்பசியை'த் தீர்த்துக்கொள்ளவும், முதலாளிகள் ஒரு அளவிற்கு கொழுத்த ஊதியத்தை அவர்களுக்குத் தருகின்றனர். எஞ்சியுள்ள தொழிலாளர்களுக்கு பிழைத்திருப்பதற்குத் தேவையான அளவுக்கான ஊதியம்கூட வழங்கப்படுவதில்லை. முதலாளிகள் கட்டளைகளின் எந்த வரையறைக்கும் கட்டுப்பட்டு அவர்கள் அமர்த்தப்பட்டு, வேலை செய்ய வைக்கப்படுகின்றனர். இல்லாவிட்டால் அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

எப்போதும் சுருங்கிக்கொண்டிருக்கும் வாங்கும் சக்தியால் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதால், சந்தை நெருக்கடி ஆழமாகி, அளவுக்கதிக உற்பத்தி எங்கும் நிறைந்துவிடுகிறது. மூடப்படவில்லையென்றாலும், இணைப்பு, ஆட்குறைப்பு என்ற போர்வையில் சிறு தொழில்கள் பகாசுர நிறுவனங்களால் விழுங்கப்படுகின்றன. தொழிலாளர்களைப் பொருத்தமட்டில், இவையெல்லாம் வேலையிழப்பு, ஊதிய இழப்பு மற்றும் வாங்கும் சக்தி இழப்புதானாகும். சந்தை நெருக்கடியானது மேன்மேலும் அதிகரிக்கிறது.

அதே கம்யூனிஸ்ட் அறிக்கையில், "பூர்ஷ்வாக்கள் இத்தகைய நெருக்கடியிலிருந்து எப்படி மீளப் போகிறார்கள்? ஒருபுறம் உற்பத்தி சக்திகளின் ஒரு பெருந்திரளை வேண்டுமென்றே அழித்தொழித்துவிட்டும், மற்றொருபுறம் சந்தையை கைப்பற்றுவதன் மூலமும், பழைய சந்தையை மேலும் சுரண்டுவதன் மூலமும். அதாவது மேலும் பரந்த அளவிலான மேலும் நாசகர நெருக்கடிக்கு வழிவகுத்துக்கொண்டும் நெருக்கடியை தவிர்ப்பதற்கான வழிகளை குறைத்துக்கொண்டும்" என இந்த இரு மாபெரும் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். எத்தகைய தீர்க்கதரிசனமான வார்த்தைகள்! நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக ஒன்றன் பின் ஒன்றாக நடந்த உலகப் போரில் "புதிய சந்தையைப் பிடிப்பதற்காக" "உற்பத்தி சக்திகளின் ஒரு பெருந்திரளை" ஏகாதிபத்திய சக்திகள் அழித்தொழித்தன. அது "மேலும் பரந்துபட்ட மேலும் நாசகர நெருக்கடிக்கு" மட்டுமே வழிவகுத்தது.

ட்ரம்ப் தற்போது மிகவும் வெறுப்பதாகக் காட்டிக்கொள்ளும் நேடோ (North Atlandic Treaty Organisation) ராணுவக் கூட்டமைப்பு உதவியுடன், முன்னாள் சோவியத் ரஷ்யாவுக்கு தடைகளை ஏற்படுத்துவது போன்ற அவர்களின் கைகளிலிருக்கும் அனைத்து முயற்சிகளையும் செய்தபின்பு, முன்னாள் காலனி நாடுகளாயிருந்த புதிதாக உதித்தெழுந்த சுதந்திர நாடுகள் மீது நவீன–காலனியாதிக்கச் சுரண்டலை மேற்கொண்டு, ஏதாவது ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் முதலாளித்துவவாதிகள்–ஏகாதிபத்தியவாதிகள் மத்தியிலான முரண்பாடுகளைக் குறைத்துக்கொள்ள முயல்கிறது. ஆயினும், இரண்டு உலகப் போர்களை உருவாக்கிய இரண்டு நெருக்கடிகளுக்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் மூன்றாம் கட்ட தீவிர பொது நெருக்கடியின் தீவிரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலக ஏகாதிபத்திய–முதலாளித்துவவாதிகள் தடுக்க முடியவில்லை.

உண்மையில் போர்களினால் சற்றும் பாதிப்படையாத அமெரிக்க ஏகாதிபத்தியம், முன்னதாக ஏகாதிபத்திய சக்திகளாக இருந்த யுகே, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளைப் பணியவைத்து தனது அரசியல் செல்வாக்கை விரிவுபடுத்திக் கொண்டது. காலப்போக்கில், இந்த ஐரோப்பிய நாடுகள் போரால் சீரழிந்துபோன அவர்களின் பொருளாதாரத்தை நிலைநிறுத்திக்கொண்டு, ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் என ஒன்றை, அதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் என ஒன்றை அமைத்துக்கொண்டு, தங்களின் நிலையை மீண்டும் அடைந்திட முயற்சித்தது. இது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையேயான முதலாளித்துவ உலகில் புதிய புதிய முரண்பாடுகளை உருவாக்கியது. உலகச் சந்தையின் ஒரு பகுதியை தங்கள் கையில் வைத்துக்கொள்வதன் வாயிலாக தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ள பல்வேறு ஏகாதிபத்திய நாடுகள் ஏற்படுத்திக்கொண்ட பல்வேறு பொருளாதார அல்லது ராணுவ கூட்டமைப்புகளின் விதி இது போன்றே ஆனது. ஆனால் சந்தை நெருக்கடியைத் தவிர்க்க காலையில் எந்த அளவிற்கு முயற்சிக்கின்றனரோ, அந்த அளவிற்கு மாலையில் புதிய தொரு நெருக்கடியினுள் சிக்கிக்கொள்வதைக் காணமுடிகிறது.

### சந்தை நெருக்கடியைத் தீர்த்திட பிரச்சாரம் செய்யப்பட்ட உலகமயமாக்கல் திட்டம் நெருக்கடியை மேன்மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது

இந்த ஆழமாகிக்கொண்டேயிருக்கும் சந்தை நெருக்கடியை தவிர்ப்பதற்கான தீவிர முயற்சியில், சோசலிச முகாம் இல்லாத ஒரு உலகச் சந்தையைப் பெறவேண்டும் என அவர்கள் கனவுகாணத் துவங்கினர். இவ்வாறாகத்தான் முழுவதுமாக இல்லாவிட்டாலும், குறைக்கப்பட்ட இறக்குமதி வரித் தடைகளுடன்கூடிய, உலகம் முழுவதிலுமான சுதந்திர வர்த்தகம் செய்யக்கூடிய உலகமயமாக்கல் திட்டம் வந்தது. சர்வதேச நிதி நிறுவனமான ஐஎம்எப் (IMF - International Monetary Fund) ஏகாதிபத்தியவாதிகளால் பராமரிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், 1990களில் துவங்கப்பட்ட இந்த உலகமயமாக்கல் திட்டம் ஒரு உறுதியான கோட்பாடாக முன்வைக்கப்பட்டு அதன் அடிப்படை அம்சங்களை அது வரையறுத்துக் கூறியது. இத்துடன் கூடவே அடுக்கடுக்கான பிற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

1947இல் கொண்டுவரப்பட்ட காட் ஒப்பந்தம் (GATT - General Agreement on Tariffs and Trade), 1995, ஜனவரி, 1இல் உருவான உலக வர்த்தக அமைப்பிற்கு (World Trade Organisation) வழிவகுக்கும் விதமாக மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. வெளிப்படையாக, இது வியாபாரத்தில் உலக வர்த்தகத்துக்கான ஒரு சட்டரீதியான உடன்பாடாகும், உண்மையில் உலகச் சந்தையை ஏகாதிபத்தியவாதிகள் கொள்ளையடிப்பதற்காக சட்ட ரீதியான அனுமதி வழங்கிடவும் உத்தரவாதப்படுத்திடவும் ஏற்படுத்தப்பட்டதாகும். இத்துடன் கூடவே காட்ஸ் எனப்படுவது (GATS- General Agreement on Trade in Services) உலக முதலாளித்துவச் சந்தையின் கட்டுப்பாட்டில் சேவைத்துறையில் (Service Sectors) உலக வர்த்தகத்தைக் கொண்டுவந்தது.

ஆக யதார்த்தத்தில், சந்தை நெருக்கடியிலிருந்து தப்பிக்க, மனித செயல்பாடுகளின் மற்றும் உற்பத்தியின் ஒட்டுமொத்த வரம்பும் உலகமயமாக்கல் சங்கிலிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தங்குதடையற்ற முதலாளித்துவ–ஏகாதிபத்தியச் சுரண்டலை உத்திரவாதப்படுத்திட, பல்வேறு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை உலகச் சந்தையில் தங்கள் பிடியை பராமரித்துக்கொள்ள முன்னணி ஏகாதிபத்திய சக்திகள் ஏற்படுத்திக்கொண்ட ஜி 7 அமைப்பு மற்றும் நிதி நிலைத்தன்மையை வளர்த்தெடுத்துக்கொள்வதற்கான கொள்கையை விவாதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட இருபது நாடுகளின் அரசாங்கங்கள் மற்றும் அவைகளின் மத்திய வங்கி கவர்னர்களைக்கொண்ட ஜி 20 எனப்படும் ஒரு சர்வதேச அமைப்பாகும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அவர்களின் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கின்றனர் என நிரூபித்திட ஏகாதிபத்தியவாதிகள் விரும்புகின்றனர்.

### சிதறிக்கொண்டிருக்கும் முதலாளித்துவ உலகு – ஐரோப்பிய ஒன்றியம் ஒரு தோற்றுப்போன பரிசோதனை என நிரூபிக்கப்பட்டுவிட்டது

ஆனால் உண்மையில் என்ன நடந்தது? உலக ஏகாதிபத்தியம் ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறது. ஜி 7 அமைப்பில் ஏற்பட்டிருக்கும் பிளவு அதனை ஜி 6 + 1 என ஆக்கிவிட்டது. ஜி 20 என்கின்ற அமைப்பு ஒழுங்கற்றுப் போயிருக்கிறது. டபிள்யூடிஓவின் (WTO) சட்ட விதிகளை மறுவடிவமைக்க வேண்டும் என இந்திய ஏகபோகவாதிகள் அறைகூவல் விட்டிருக்கின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்ளும் நோக்கத்தில் ஐரோப்பிய முதலாளித்துவ–ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியமானது (EU- European Union) அதனுள்ளே வெடித்துக்கொண்டிருக்கும் முரண்பாடு வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் இப்போது அதுவும் ஒரு தோற்றுப்போன பரிசோதனையாகும்.

வெகு நாட்களுக்கு முன்பாகவே எமது கட்சி முடிவெடுத்திருப்பதைப் போல, ஒற்றை ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு எனும் கனவு ஒருபோதும் பலிக்கப் போவதில்லை. அதன் ஆரம்பகால பரவசம் கொண்டிருந்தது முதலான ஒரு பத்தாண்டுகளிலேயே பெருமளவிலான பட்ஜெட் பற்றாக்குறையில், பற்றாக்குறையை சரிசெய்திட சந்தையில் வாங்கிய கடனால் உயர்ந்துகொண்டிருக்கும் அரசுக்கடனில், வேகமாக அதிகரித்துக்கொண்டிருக்கும் வேலையின்மையில், மக்களை மேலும் துயரத்துக்குள்ளக்கின்ற சிக்கன நடவடிக்கை மூலம் நெருக்கடியிலிருந்து அவசர அவசரமாக மீண்டுவர அரசாங்கங்கள் முயல்வதால் ஏற்படுகின்ற சரிக்கட்ட முடியாத அரசியல் நெருக்கடியில், முதலாளிகளைக் காப்பாற்றிட மக்களின் பணத்தை அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கும் அதே வேளையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தீவிர பொருளாதார மந்தத்தின் பிடியில் மீண்டும் சிக்கியிருக்கிறது.

சந்தை நெருக்கடியால் நொடித்துப்போயிருக்கும் உறுப்பு நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளிவருவது பற்றியும், வெளியேறுவது பற்றியும் கூட எண்ணிக்கொண்டிருக்கின்றன. அதாவது அது கிரெக்சிட் ( GREXIT - Greek Exit ) மற்றும் பிரெக்சிட் (BREXIT - Brittain Exit) என அழைக்கப்படுகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் புற எல்லையில் அமைந்திருக்கும் உறுப்பு நாடுகளான கிரீஸ், போர்ச்சுகல், அயர்லாந்து, அதன் பின்னர் ஸ்பெயின் மற்றும் இத்தாலி துவங்கி யுகே, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற மிகப்பெரும் நாடுகள் கலங்கிப் போயிருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தில் இன்னும் இருந்துகொண்டிருக்கும் நாடுகளுக்கு மத்தியில், அதாவது ஜெர்மனி போன்ற மிகவும் சக்திவாய்ந்த நாடுகளுக்கும் பலவீனமான நாடுகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மிகப்பெரும் நாடுகளிக்கிடையே இருக்கும் முரண்பாடுகள் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. இதைச் சாதகமாக்கிக்கொண்டு ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்காவானது, ஓர்

தொடர்ச்சி 9ம் பக்கம்

## இறக்குமதி வரிப்போர்

# தங்களின் எரியும் பிரச்சினைகளை முன்வைத்த ஒன்றுபட்ட தொடர்ச்சியான போராட்டத்திற்கு மக்கள் துணைநிற்க வேண்டும், இறக்குமதி வரியை எதிர்த்திட வேண்டும்

8ம் பக்கத் தொடர்ச்சி

ஐரோப்பிய ஒற்றுமை எதிர்ப்பு பிரபலத்தை, தூதுவராக ஐரோப்பிய ஒன்றிய தலைமையிடமான பிரஸ்ஸல்ஸுக்கு நியமித்திருக்கிறது.

### உலகமயமும் மக்கள் நிலைமையும்

முன்னேறிய சக்திவாய்ந்த நாடுகள் மற்றும் ஒப்பீட்டளவில் பலவீனமான நாடுகள் ஆகிய இரண்டிலுமுள்ள உலக மக்களைப் பொருத்தமட்டில், உலகமயம் என்பது மக்களை ஏமாற்றிட, ஈவிரக்க மற்ற முறையில் முதலாளித்துவ சுரண்டலை தொடர்ந்திடுவதற்காக ஏகாதிபத்திய ஆட்சியாளர்களால் வைக்கப்பட்டிருக்கும் ஏமாற்றுக் கோஷமின்றி வேறேதுமல்ல என்பதை உணர்ந்திட நேரம் பிடிக்கவில்லை. இதன் விளைவாக உலகம் முழுவதும் கடுங்கோபமும், சீற்றமும், எதிர்ப்பும் அதிகரித்தவண்ணம் உள்ளது. உதாரணமாக, அமெரிக்காவிலேயே நடைபெற்ற 1 சதவீதத் தினருக்கு எதிரான 99 சதவீதத்தினர் எனும் வால் ஸ்ட்ரீட் போராட்டத்தில், எண்ணெய் வளம் நிறைந்த மத்தியக் கிழக்கு நாடுகளில் நடந்த அரபு எழுச்சிப் போராட்டத்தில், ஐரோப்பாவில் நடந்த வேலை நிறுத்தம் உள்ளிட்ட மக்கள் பெருந்திரள் எதிர்ப்புப் போராட்டங்களில், உதாரணமாக 2018 மார்ச் மாதத்தில் பிரான்சில் 2,00,000 பொதுத்துறை நிறுவனத் தொழிலாளர்கள் பொதுச்சேவைகளை தனியார்மயப்படுத்துவதற்கு எதிராக நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் இது பிரதிபலித்தது.

இப்பின்னணியில் தற்போதைய போர் முழக்கத்தை, இதுவரையிலான வர்த்தகப்போர் என அழைக்கப்படுவதை மதிப்பிடவேண்டியிருக்கிறது. இது கட்டுப்பாடில்லாமல் பேசுகின்ற ட்ரம்பின் முழக்கமல்ல. அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் கட்டாயத்தின் பேரில்தான் அவர் இப்படிப் பேசுகிறார். அவர்களின் கூட்டு நலனைத்தான் ட்ரம்ப் இவ்வாறு தனது சொந்த பாணியில் பிரதிபலிக்கிறார். இந்தப் பின்னணியிலும்கூட, பிற ஏகாதிபத்திய நாடுகளின் பதில் நடவடிக்கைகளையும் எதிர்வினைகளையும், மேற்கத்திய முன்னேறிய உலக நாடுகள் என்றழைக்கபடுகின்ற நாடுகளுக்கு மத்தியில் அல்லது சீனா மற்றும் இந்திய போன்ற நாடுகளுக்கிடையேயான அவைகளின் பரஸ்பர சேர்க்கைகளையும் பிளவுகளையும் பார்க்க வேண்டியுள்ளது. இத்தகைய நாடுகள் ஒவ்வொன்றும் பயங்கர சந்தை நெருக்கடியினுள், தொழில் மந்தத்தில், வேலையின்மையில், வர்த்தகப் பற்றாக்குறையில் மற்றும் இதுபோன்ற சிக்கல்களில் மூழ்கியிருக்கின்றன. இப்போது அவைகள் ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலினால் எழுந்துள்ள நெருக்கடியின் அறிகுறியிலிருந்து விடுபடுகையில், மற்றுமொரு அறிகுறி மிகவும் தீவிரமடைந்துவிடுகிறது. அவைகளின் உலகமயமாக்கல் பரிசோதனை தோல்வியடைந்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது. இதன் விளைவாக அவைகளின் சந்தை நெருக்கடி மேலும் ஆழமாகியே இருக்கிறது.

### மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் செய்யப்படும் பூர்ஷ்வாக்களின் பரிசோதனைகளிலிருந்து மக்கள் எதிர்பார்த்து நிற்பதற்கு எதுவுமில்லை

சுதந்திர வர்த்தக–உலகமயமாக்கல் மற்றும் பாதுகாப்புவாதம் ஆகியன சந்தை நெருக்கடியிலிருந்து தப்பித்திட ஆளும் எந்த முதலாளித்துவ வர்க்கத்தால் மேற்கொள்ளப்படும் தந்திரமேயன்றி வேறல்ல என்பதை இங்கே காணத் தவறக்கூடாது. ஒரு காலத்தில் உலகமயமாக்கலின் ஆதரவளராக இருந்த அமெரிக்கா, உண்மையிலேயே ஒரு சுதந்திர வர்த்தக நாடாக எப்போதாவது இருந்திருக்கிறதா? இல்லை. அமெரிக்க அரசாங்கம் சுதந்திர வர்த்தகம் பற்றி பெரிதும் பேசியது ஆனால், பொருளாதார எல்லை முழுவதிலும் வர்த்தகத்தடைகளைக்கொண்ட ஒரு பாதுகாப்பு அடுக்கைப் பராமரித்துக் கொண்டேயிருந்தது.

சுதந்திர வர்த்தகத்திற்கு ஆதரவான குடியரசுக் கட்சி ஜனாதிபதி ரொனால்டு ரீகனின் நிர்வாகம், தன்னிச்சையாக ஜப்பான் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் மோட்டார் வாகன எண்ணிக்கையை கட்டுப்படுத்துமாறு அந்நாட்டைக் கட்டாயப்படுத்தியது. சுதந்திர வர்த்தக ஆதரவாளரான ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷும்கூட அந்நிய நாட்டு எஃகுக்கு இறக்குமதி வரியை அறிவித்தார். சமீபத்தில் கூட அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக இருந்த ஹில்லரி கிளின்டனும் டொனால்டு ட்ரம்பும், அவர்களுக்குள் வர்த்தகத்தைப் பொருத்தவரையில் சிறிய வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்கள் இருவரும் பலதரப்பு வர்த்தக உடன்பாடுகளுக்கான அமெரிக்க ஆதரவு பற்றி கேள்வியெழுப்பியதுடன், உலகமயமாக்கல் பற்றிய, தொழிலாளர்களை–மையப்படுத்திய (Worker-centric), ஜனரஞ்சக வெற்று வார்த்தைகள் பேசுவதில் ஈடுபட்டிருந்தனர். சாராம்சத்தில், உலகமயமாக்கல் வருடக்கணக்கில் இருந்துகொண்டு, ஒரு காலத்தில் சக்திவாய்ந்ததாக இருந்த அமெரிக்க முதலாளித்துவப் பொருளாதாரம் இப்போது அனைத்துவகையான குன்றிய வளர்ச்சியையும், சீரழிவையும், தேக்க நிலையையும், மந்த நிலையையும் சந்தித்துக்கொண்டிருக்கிறது.

தற்போதைய பாதுகாப்புவாதம் என்பது கட்டாய–எதிர்நடவடிக்கை (Counter-compulsion) யாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒட்டுமொத்த நலன்களுக்குச் சேவை செய்திட, சந்தை நெருக்கடியிலிருந்து மீட்கும் கடமையுடன் அதன் மூலம் மக்களின் கடுங்கோபத்திலிருந்து முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் காப்பாற்றிட, ஆளும் வர்க்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக, ட்ரம்ப் ஜனாதிபதியானார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மற்றும் அதன் ஆட்சியதிகாரத்தின் கடுந்தாக்குதல்களுக்கு எதிரான அமெரிக்க மக்களின் கடுங்கோபம் மற்றும் அதிருப்தியை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்துக்கு வருவதற்கான இப் பயணத்தில் அவர் துல்லியமாக நடைபோட்டார்.

கடுமையான, தீராத மந்தநிலைக்கும், அதிகரித்து வரும் வேலையின்மைக்கும், வறுமைக்கும், வேலையிழப்புக்கும், இருப்பிடமற்ற வாழ்க்கைக்கும் மற்றும் முழுமையான கலாச்சார அறநெறிச் சீரழிவுக்கும் காரணமாக இருந்தவைகள் யாவும் மனநிலை நோயாளிகள் அப்பாவி மக்களை எண்ணிப்பார்க்காமல் அடிக்கடி கொல்வதிலும், கருப்பின மக்களுக்கு எதிரான மிருகத்தனமான போலீஸ் அட்டூழியங்களிலும் வெளிப்பட்டது.

'அமெரிக்கா முதலில்' என்ற, அத்துடன் புலம் பெயர்ந்து வருபவர்களைத் தடுப்பேன் என்கின்ற கவர்ச்சியான கோஷத்தை எழுப்பி, மக்களது உணர்வைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களின் எதிர்பார்ப்பை புரிந்துகொள்ள ட்ரம்ப் முயற்சித்தார். இந்தத் திட்டம் தெளிவாகத் தெரிந்தது.

முதலாவதாக, அமெரிக்க மக்களை நெருக்கடியிலிருந்து மீட்டுக்கொண்டு வருவதான் அவரது வேலை என்ற வெறியுணர்வுடன் மக்களை ஏமாற்றிட அவர் விரும்பினார். இரண்டாவதாக, குடியேற்ற நெருக்கடிக்கும் குடியேறிகள் வருகைக்குமான காரணத்தை மாற்றிக்கூற விரும்பினார். இப்போது அவர் பதவியில் இருந்துகொண்டு, மக்களிடையே அதிகரித்துவரும் அதிருப்தியை தணிக்க இத்தகைய கோஷங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்.

மற்றொருபுறம், நெருக்கடியில் சிக்கியிருக்கும் உலக முதலாளித்துவத்தின் முன்னணி சக்திகளில் ஒன்றான அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளுக்குள்ளேயும் வெளியிலேயும் அதாவது உலக அளவிலும் எங்கும் நிறைந்த மிகமிக ஆழமான சந்தை நெருக்கடியினுள் வீழ்ந்துகொண்டிருக்கிறது. இதற்கு மத்தியில், இறுதியாக ஆளும் முதலாளித்துவ வர்க்கம், ஏகபோகவாதிகள் மற்றும் கார்ப்பொரேட் குடும்பங்களின் ஒட்டுமொத்த நலன்களுக்குச் சேவை

தொடர்ச்சி 11ம் பக்கம்

## புதுக்கோட்டை மாவட்டம்

# விவசாயிகளின் கோரிக்கைக்கான கூட்டம்



கூடலூர்





சேமங்கோட்டை

26.07.2018 தேதியில் புதுக்கோட்டை மாவட்டம் சேமங்கோட்டை, கடவாக்கோட்டை, பொன்ன மங்களம் சுற்றியுள்ள விவசாயிகள் மற்றும் கூடலூர் விவசாயிகள் கூட்டம் இரு இடங்களில் நடைபெற்றது. இரு கூட்டங்களிலும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். விவசாயிகளோடு விவாதம் நடத்தப்பட்டன. அதில் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் (AIKKMS) பிரதிநிதியாக தோழர் நாகம்மாள், தமிழ்நாடு ஏஐகேகேஎம்எஸ் பொறுப்பாளர் ஆ ரெங்கசாமி, ஏஐகேகேஎம்எஸ் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் என் சந்திரபோஸ் மற்றும் கோவிந்தராஜன் ஆகியோர் கலந்துகொண்டு ஏஐகேகேஎம்எஸ் சங்கத்தில் ஒன்றிணைய வேண்டியதின் அவசியம் பற்றி பேசினர். 10 பேர் கொண்ட ஏஐகேகேஎம்எஸ் கிராம கமிட்டி உருவாக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பொதுபணிக்கு சம்மந்தமான சேமங்கோட்டை கண்மாய்யை தூர்வாரவும், கரை உயர்த்தவும், உடைந்த மதகுகளை சரிசெய்யவும், கண்மாய்க்கு வரும் நீர் வழிகளை சரி செய்யவும், வேலி கருவேலை மரங்களை வெட்டவும், சேமங்கோட்டை சின்ன கண்மாயில் உள்ள தாமரை செடிகளை அகற்றக்கோரியும் கலெக்டரிடம் மனு கொடுப்பதென முடிவு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது.

கூடலூர் விவசாயிகள் கூட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கக் கோரியும், ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டியும் நியாய விலைக்கடையை நான்கு கிராம மக்களுக்கும் பொதுவான இடத்தில் அமைத்துத் தர வேண்டுமாயும் சுக்கா ஊரணியை தூர்வாரி, குடிநீருக்கு மட்டும் பயன்படுத்துவதற்காக படித்துறை மட்டும் பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறும், கிராமச் சாலை, சுடுகாட்டிற்கு செல்லும் வழி, தெரு ஆகிய சாலைகளை சரி செய்ய வேண்டுமாயும் கலெக்டரிடம் மனுகொடுக்க தீர்மானிக்கப்பட்டது. 06.08.2018 கலெக்டரிடம் மனு கொடுக்கப்பட்டது, ஒரிரு கோரிக்கைகள் நிறைவேற்றுபட்டுள்ளன ■

# தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை நீடூழி வாழ்க . . .

2ம் பக்கத் தொடர்ச்சி

நற்சிந்தனை கொண்டோரின் மனதில் ஒரு கேள்வி எழுவது இயற்கையே: இஸ்லாமிய மதத்துக்கு ஆதரவளிக்கின்ற காரணத்தால் இஸ்லாமிய அரசு, மதச் சார்பு அரசு என்று பாகிஸ்தான் அழைக்கப் படுமானால், அனைத்து மதங்களையும் ஆதரிக்கின்ற, ஊக்குவிக்கின்ற இந்தியாவை பன்மதச் சார்பு அரசு என்று அழைக்காமல் வேறெப்படி அழைப்பது?

மதச்சார்பற்ற ஜனநாயகம், மதச்சார்பற்ற ஜனநாயக ரீதியான வாழ்க்கை கோட்பாடுகள் யாவை? மதச்சார் பற்ற கருத்தையும் மதச்சார்பற்ற வாழ்க்கைக் கோட்பாடுகளையும் வளர்த்தெடுப்பதில் கல்வி முக்கியப் பங்காற்றுகிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். எனவே ஒரு மதச்சார்பற்ற அரசில் கல்வி என்பது எப்போதும் மத விழுமியங்களுக்கு எதிரான மதச்சார்பற்ற விழுமியங்களை இயல் பாகவே உயர்த்திப் பிடிக்க வேண்டும். இந்தியா உண்மையிலேயே மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், மத போதனைகளிலிருந்து கல்வியை முழுமையாக விடுவிக்க வேண்டும். ஆனால் ஒப்புக்கு மதச்சார் பற்ற அரசாக விளங்கும் நமது அரசில் உண்மையில் நாம் காண்பது என்ன? மதத்தின் செல்வாக்கிலிருந்து கல்வியை விடுப்பதற்கு பதிலாக, கல்வி அமைப்பின் மீதான மதத்தின் தாக்கம், கல்வி நிலையங்களில் மத சடங்குகளை நடத்துதல், பாடப்புத்தகங்களின் மூலம் மதப்பிரச்சாரம் நடத்துதல் ஆகியன இருந்து வருவதோடு இவை தொடர்ந்து அதிகரித்தும் வருகின்றன. எனவேதான் கல்வியை ஜனநாயகப் படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இயக்கம் கட்டுவோர் மற்றெதையும்விட முதலில் இரண்டு விஷயங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, மதபோதனை யிலிருந்து கல்வி முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, முதலாளித்துவ சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்காக உழைக்கும் வர்க்கமும் பிற பிரிவு சுரண்டப்படும் மக்களும் இச்சமுதாயத்தில் நடத்துகின்ற அரசியல், பொருளாதார, சமூக போராட்டங்களுக்கு உகந்ததாக கல்விச் சீர்திருத்தங்களை வழிநடத்தும் கண்ணோட்டம் இருக்கின்றதா என்று ஆய்வு செய்யவேண்டும். இந்த இரண்டு அளவுகோல்களைக் கொண்டுதான் கல்விச் சீர்திருத்தத்திற்காகவும் கல்வியை ஜனநாயகப்படுத்துவதற்காகவும் நடை பெறும் இயக்கங்கள் முற்போக்கானவையா அல்லது பிற்போக்கானவையா என்பதை நாம் தீர்மானிக்க இயலும். கல்விச் சீர்திருத்தத்திற்காக நமது நாட்டில் ஏராளமான ஆணையங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இவ்வாணையங்கள் அனைத்தும் கல்விச் சீர்திருத் தங்களுக்காக மிக விரிவான மிக நுணுக்கமான அம்சத்தைப்பற்றிய ஆயிரக்கணக்கான பக்கங்களு டன் கூடிய தடிமனான புத்தகங்களை சமர்ப்பித் துள்ளன. ஆனால் எந்தவொரு ஆணையத்தாலும் பிரச்சினையின் ஆணிவேரைத் தாக்க இயலவில்லை. எனவேதான் நாட்டின் ஒழுக்கக்கேடிற்கான உண்மை யான காரணத்தை எந்த தலைவராலும் அடையாளம் காண இயலவில்லை. நாம் சரியாக நடந்துகொள்வ தில்லை; எனவேதான் இந்த சீர்கேடு என்று பல அறிவுஜீவிகளும் அரசியல் தலைவர்களும் நம்புகின்றனர்.

மக்களிடம் நன்நடத்தை இல்லை என்று நம்பிக் கொண்டு, அதே சமயம், பிரச்சினையை உண்மை யிலேயே புரிந்துகொள்ள முயற்சிக்கின்ற நேர்மையான நபர்களிடம் ஒரு விஷயத்தை முன்வைக்க விரும்பு கிறேன். அரசியலிலோ கல்வி நிலையங்களிலோ நிர்வாகத்திலோ தனிநபர் நன்னடத்தை நெறிகள் இல்லை என்பது உண்மைதான். இதை எல்லோரும் உணர்கிறார்கள், நாமும் உணர்கிறோம். ஆனால், ஏன் இப்படி இருக்கிறது? சில ஆண்டுகளுக்கு முன்பு கூட, விடுதலைப் போராட்ட காலகட்டத்தில், தலைவர்களாகிய நீங்கள், மாணவர்களை 'வங்கத்து மலர்கள்' என்று அழைத்தீர்கள். எல்லாவற்றையும் அர்ப்பணித்து, எதைப்பற்றியும் கவலைப்படாமல், தங்கள் பட்டம் பதவிகளை தியாகம் செய்து அம்மாணவர்கள் தாங்களாகவே விடுதலைப் போராட்டத்தில் குதித்தனர், அக்காலத்தில், ஆசிரியர் களைத் தங்களுடைய முன்மாதிரிகளாக மாணவர் கள் கருதினர். இன்று ஏன் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை? எங்கே தொலைந்தனர் அவர்கள்? அன்றைக்கு ஏதோ கடவுள் நம்மை எண்ணி மகிழ் திருந்த காரணத்தால் நல்ல பிள்ளைகளை நமது மகன்களாக படைத்தாரா? அதே கடவுள் இன்று நம்மீது வெறுப்புற்றதால் கெட்டவர்களையே இம்மண்ணில் படைக்கிறாரா? இவ்வாறாகவா நாம் முடிவு செய்யப்போகிறோம்? நீங்கள் யாரும் நிச்சயமாக இப்படிக் நினைக்கமாட்டீர்கள். பின் எதனால் ஒழுக்கநெறித் தரம் தாழ்ந்து வருகிறது? ஒழுக்க நெறிகள் உயரவேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோமல்லவா? நேர்மையாக வாழுமாறும், கடுமையாக உழைக்குமாறும் நாட்டைக் காக்குமாறும் நாம் மக்களைத் தூண்டுகிறோ மல்லவா? ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு நாம் அவர்களை தூண்டுகிறோமோ அவ்வளவுக்கவ் வளவு அவர்கள் மிக மோசமான சந்தர்ப்பவாதி களாக அன்றோ மாறுகின்றனர்! ஏன் இந்த நிலை?

இங்கு நான் மற்றொரு விஷயத்தையும் விவாதிக்க விரும்புகிறேன். நமது அரசியல் செயல் பாடுகளின் ஒவ்வொரு களத்திலும் நாட்டின் கலாச்சார இயக்கத்திலும் 'நடைமுறைவாதத்'தின் (ப்ராக்மெடிக் – Pragmatic) செல்வாக்கு படிப்படி யாக நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஆனால் இந்த நடைமுறைவாதம் என்பது மார்க்சிசமும் விஞ்ஞானமும் வலியுறுத்துகின்ற 'தேவையைப் பற்றிய கோட்பாட்'டிற்கு முற்றிலும் மாறுபட்டது. வாழ்க்கையின் அனைத்து பகுதிகளிலும் இன்று நாம் காணும் இந்த கீழ்த்தரமான 'நடைமுறைவாத மா'னது மார்க்சிசத்தை கொச்சைப்படுத்தியதிலிருந்து முளைத்ததாகும். ஏனெனில், நான் பார்த்த வரையில், இந்தச் சீரழிவானது முற்போக்குவாதிகள், மார்க் சிஸ்டுகள், சோசலிஸ்டுகள் என அழைக்கப்படும் முற்போக்குவாதிகளிடம்தான் அதிகம் வெளிப்படு கிறது. தேவை பற்றிய மார்க்சிய கருத்தியலை பிரயோகிப்பதில் பல மார்க்சிஸ்டுகள் நடைமுறை வாதிகளாகிவிட்டனர். மனித இனத்தின் உண்மை யான தேவையை உடனடித் தேவை பிரதிபலிக்கிறதா என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அதாவது, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர விழிப்புணர்வு வளர்வதற்கு இந்த உடனடித் தேவை உதவுகிறதா என்றும் சமூக முன்னேற்றத் திற்கும் புரட்சிக்கும் உகந்ததாக இருக்கிறதா என்றும் ஆராய்வதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை. விஞ்ஞானம் வலியுறுத்துகின்ற சமுதாயத்தின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்கு எது தேவையோ அந்தத் தேவையைத்தான் தேவை பற்றிய கோட்பாடாக மார்க்சிசம் முன்வைக்கின்றது. அதைத்தான் அறிவியலும் வலியுறுத்துகின்றது.

சமூகத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தின் மேம்பாடு மற்றும் முன்னேற்றத்தின் மூலமாக ஒரு தனிநபரின் புரட்சிகர விழிப்புணர்வு தொடர்ந்து வளருகின்ற செயற்போக்கில் அவரது உண்மையான முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் எது உகந்ததோ அந்தத் தேவையைப் பற்றிய கோட்பாடுதான், மார்க் சிசத்தையும் விஞ்ஞானத்தையும் பொருத்தமட்டில், உண்மையிலேயே 'தேவையை அங்கீகரிப்பது' ஆகும். இந்தத் தேவைக்கும் ஒரு தனிநபரின் தேவைக்கும் இடையே அவ்வப்போது முரண்பாடுகள் எழுகின்றன. சில சமயம் ஒரு அரசியல் கட்சியின் உடனடித் தேவைக்கும் இந்த சமூகத் தேவைக்கும் இடையேகூட முரண்பாடுகள் எழக்கூடும். இத்தகைய முரண்பாடுகள் எழும்போது கட்சியின் உடனடித் தேவையை அடிபணியச்செய்ய வேண்டும்; அத்தகைய தேவையை சமூகத் தேவையிடம் ஒப்படைத்திட வேண்டும். இன்று அரசியல், கலாச்சார இயக்கங் களின் ஒவ்வொரு அம்சத்தையும் மேன்மேலும் பீடித்துவரும் 'நடைமுறைவாதத்தின்' தாக்கத்தைப் பற்றி ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் தேவையின் மிக மோசமான வடிவம் என்று கூறலாம். 'அவர்கள் மிகவும் கற்பனாவாதத்தனமாக இருக் கிறார்கள், அவர்களது அணுகுமுறை கொஞ்சம் நடைமுறைக்கு ஒத்துவருவதாக இருக்கவேண்டும்' என இன்று பல பண்டிதர்கள் கூறுவதைக் கேட்கலாம். 'நடைமுறைவாதம்' என்பது கொச்சைப் படுத்தப்பட்ட கருத்துமுதல்வாதத் தத்துவம் என்று அறியாதவர்களாக அவர்கள் இருக்கவேண்டும்; அல்லது வேண்டுமென்றே அவர்கள் இத்தவறுகளை செய்வதாக இருக்கவேண்டும். இவ்வாறுதான் எனக்குத் தோன்றுகிறது. எளிமையான அரசியல் வார்த்தையில் கூறிவதென்றால் 'நடைமுறைத் தனமான பரிசீலனை' என்பது 'சந்தர்ப்பவாதமான பரிசீலனை' என்றே பொருள்படும். சொல்லப் போனால், 'நடைமுறை' (ப்ராக்டிகல்) என்பதை அவர்கள் 'நடைமுறைவாதத்'துடன் (ப்ராக்மெடிக்) குழப்பிக்கொண்டுள்ளனர். அறிவியலில் எது நடை முறை (ப்ராக்டிகல்) என்று அறியப்படுகிறதோ அது நடைமுறைவாத அணுகுமுறைக்கு முற்றிலும் எதிரானது என்று அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நடைமுறைவாதமானது உண்மையான தேவையை பிரதிபலிப்பதில்லை. மாறாக, தேவையைப் பற்றிய தவறான புரிதலையே பிரதி பலிக்கிறது. இந்த நடைமுறைவாதம் இன்று பெரும் நாசத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இது மனிதர்களை மேன்மேலும் சுயமையமானவர்களாக மாற்றிக்கொண்டிருக்கிறது. வெகுஜன இயக்கத்தின் ஜீவனையே அரித்துக்கொண்டிருக்கிறது.

உண்மையில், இவ்விஷயங்களை எனது விவாதத்தில் கொண்டுவந்ததற்கான காரணம் கலாச்சார இயக்கம் சந்தித்துக்கொண்டிருக்கும் பிரச்சினைகளை சரியாகத் தீர்மானிப்பதற்கான அளவுகோலைக் கண்டுபிடிப்பதற்காகவே ஆகும். இவ்வனைத்திலிருந்தும் நமக்குத் தெளிவாவது என்னவெனில், கலாச்சார இயக்கமோ, அரசியல் இயக்கமோ எதுவாயினும் அது, முற்போக்கானதா பிற்போக்கானதா என்பதை முடிவு செய்வதற்கு ஒரு தனிநபரின் உய்த்துணர்தலை மட்டுமே சார்ந் திருப்போமாயின் நாம் தவறிழைப்பது நிச்சயம். வரலாற்று ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் காரண–காரியத்தின் வெளிச்சத்திலும் தீர்மானித்து, அதனை வரலாறு, விஞ்ஞானம், தர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நாம் பெற்ற அனுபவங்களோடு ஒன்றிணைக்கவேண்டும்... ■

## ஆகஸ்ட் 5: பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

## சிப்தாஸ் கோஷ் அவர்களின் 42வது நினைவுதினம்




ஆகஸ்ட் 7, 2018 அன்று புதுச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் லெனின்துரை தலைமை தாங்கினார், தோழர் ஸ்ரீதர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), மத்திய ஸ்டாப் உறுப்பினர் உரையாற்றினார்

# சென்னை அயனாவரத்தில் 11 வயது மாற்றுத்திறனாளி சிறுமிக்கு நிகழ்ந்த பாலியல் வன்கொடுமையை அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது

*11 வயது மாற்றுத்திறனாளி சிறுமிக்கு நிகழ்ந்த பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் 19.07.2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

சென்னை அயனாவரத்தில் 11 வயது மாற்றுத்திறனாளி சிறுமி பல மாதங்களாக பலரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்ட செய்தி தமிழ்நாட்டு மக்களை பெரும் அதிர்ச்சியிலும் கடுங்கோபத்திலும் ஆழ்த்தியுள்ளது.

உலகிலேயே பெண்களுக்கு பாதுகாப்பற்ற நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடம் பெற்றுள்ள செய்தி சமீபத்தில் வெளியானபோது தமிழகம் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மாநிலமாகத் திகழ்கிறது என்று தமிழக முதலமைச்சர் தெரிவித்தார். அக்கூற்று எந்த அளவிற்கு உண்மைக்குப் புறம்பானது என்பதை இச்சம்பவம் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

ஆட்சியாளர்கள் என்னதான் தங்கள் ஆட்சியைப்பற்றி பெருமைபட பேசிக்கொண்டாலும் உண்மை நிலை அதற்கு நேரெதிராகவே உள்ளது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பெண்களுக் கெதிரான பாலியல் குற்றங்களும் அவை அரங்கேறுகின்ற விதமும் சமுதாயத்தில் கலாச்சார சீர்கேடும் பாலியல் வக்கிரங்களும் ஆணாதிக்க சிந்தனையும் எந்த அளவிற்கு புரையோடியுள்ளன என்பதை இதுபோன்ற சம்பவங்கள் திரும்பத் திரும்ப நிரூபிக்கின்றன. வெளியில் வந்துள்ள குற்றங்கள் மிகச்சில புதைந்துபோயுள்ள குற்றங்கள் எத்தனையெத்தனையோ!

காலங்காலமாக நிலவிவருகின்ற பெண்களை இழிவாகக் கருதும் ஆணாதிக்க சிந்தனைகள், சினிமா, தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங் களிலும் விளம்பரங்களிலும் பெண்களை ஆபாசமாக போகப்பொருளாக சித்தரித்தல், ஊடகங்களிலும் டிஜிட்டல் தளத்திலும் வேகமாகப் பரவி வியாபித்துவருகின்ற ஆபாசமான பாலியல் வக்கிர படங்கள் வீடியோ காட்சிகள், திட்டமிட்டு பரப்பப்பட்டு செய்யப்படும் மதுபானங்கள் போதைப்பொருட்கள் ஆகியன சமுதாயத்தில் ஒட்டுமொத்த கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்தி யுள்ளது. இதுவே பொதுவாக குற்றங்களும், குறிப்பாக பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்களும் நிகழ்வதற்குக் காரணமாகும். ஆயினும், இவற்றின் தங்கு தடையற்ற பரவலைத் தடுப்பதற்கு அரசாங்கங்கள் எவ்வித சீரிய நடவடிக்கைகளும் எடுப்பதாகத் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆதரவாக எமது அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் நிற்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்ற அதே வேளையில் குற்றவாளிகள் உரிய முறையில் தண்டிக்கப் படுவதை உறுதிப்படுத்துமாறும் அரசாங்கத்தை கோருகிறோம். இக்குற்றவாளிகளுக்காக வாதிடுவதில்லை என்று உறுதியேற்றுள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்திற்கு எங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உண்மையிலேயே மகளிர் நலன் மற்றும் பெண் சுதந்திரம் பற்றி இவ்வரசாங்கங்களுக்கு சிறிதேனும் அக்கறை இருக்குமானால் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பதற்கான மேற்குறிப்பிட்ட காரணிகளை முற்றிலும் ஒழித்திட சீரிய நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசாங்கங்கள் மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்துகிறோம். இதே கோரிக்கைகளை வலியுறுத்தி உரத்த குரலெழுப்புமாறு நல்லெண்ணமும், நற்சிந்தனையும், ஜனநாயக மனப்பான்மையும் கொண்ட மக்களை அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் கேட்டுக்கொள்கிறது ■

# இறக்குமதி வரிப்போர் . . .

9ம் பக்கத் தொடர்ச்சி

புரிந்திடும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டி ருக்கும், அதே நேரத்தில் மக்களின் அதிருப்தி குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக்கொண்டிருப் பதை ட்ரம்ப் நிர்வாகம் காண்கின்றது. எனவே புதிய புதிய தந்திரங்களை கையாளுகின்றது.

மக்களிடமும், ஆளும் முதலாளித்துவ வர்க்கமான அவரது எஜமானரிடமும் அவர் கூறியபடி, ஒரு பலமிக்க மனிதராக அவரது தோற்றத்தைப் மீண்டும் புதுப்பித்துக்கொள்ளும் கடினமான ஒரு புதிய கடமையையும், ஆக முடிந்த வழியில் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு சேவை செய்யும் கடமையையும் அவர் எதிர்கொண்டுள்ளார். வருங்கால வாடிக்கையாளர்களின் மனதை மயக்கி, அது பொய்யானதாக இருந்தாலும், சந்தையில் மிகச் சரியான நேரத்தில் அவர்களைத் தூண்டிட முயற்சி செய்யும் எந்தவொரு தீவிர தொழிலதிபர் போன்றே, டொனால்டு ட்ரம்ப் எடுக்க முயற்சி செய்யும் நடவடிக்கைகள் உள்நாட்டிலும் உலக அளவிலும் நிச்சயம் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

யுஎஸ்ஏவின் பிரதான வர்த்தகப் பங்குதாரர்கள் அனைவரையும் பாதிக்கின்ற வகையில் பரந்த அளவிலான பொருட்களுக்கு இறக்குமதி வரியை விதித்து, யதார்த்தத்தில் வர்த்தகப் போரை அறிவித் திருப்பது, ட்ரம்ப் நிர்வாகம் உலகத்தின் முன்பாக முன்வைத்திருக்கும் அதிர்ச்சிகளில் ஒன்றாகும். எவ்விதத்திலும் இத்தகைய உயர்த்தப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட இறக்குமதி வரிகள் சாமானிய அமெரிக்க மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை. மாறாக, ஆர்டர்களை இழந்துவிடு வோமோ என்ற அச்சத்திலும், அவர்களுக்குத் தேவையான இறக்குமதியைச் செய்ய முடியுமா என்ற அச்சத்திலும் அமெரிக்க விவசாயிகள் நடுங்கிப்போயிருக்கின்றனர். இத்தகைய நிறுவனங்கள் இறக்குமதி வரியை தீவிர தடையில்லாத அண்டை நாடுகளுக்கு இடம் பெயர்வது குறித்து யோசித்து வருகின்றன.

ஆக, காலப்போக்கில், நிபுணர்கள் ஏற்கெனவே கருத்து தெரிவித்துள்ளபடி, வர்த்தகப்போரானது நெருக்கடியைத் தீவிரப்படுத்தவே செய்யும். இவைகள் குடியேறிகள் பிரச்சினையையும், ஆக மனிதாபி மானமற்ற வகையில் தடை விதித்து பெற்றோர் களிடமிருந்து அப்பாவிக் குழந்தைகளை பிரிக்கும் பிரச்சினையையும் தீர்க்கப்போவதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் மலிவான கூலியிலான தொழிலாளர்கள் கிடைத்திட ஒருகாலத்தில் குடியேறிகளைத் தூண்டிவிட்டது என்பதையும், இன்னுமொரு சமயத்தில் தாங்கமுடியாத வகையில் வேலையின்மையானது அமெரிக்க மக்களை இவ்வமைப்புக்கு எதிராகத் தள்ள எத்தனிக்கையில், வேலையின்மைக்குக் காரணம் குடியேறிகள் பிரச்சினையே எனும் அச்சத்தை எழுப்பி, குடியேறி களுக்கு எதிரான மனிதாபமற்ற 'பூஜ்ஜிய சகிப்புக்' (Zero-tolerance) கொள்கைகள் வேண்டுமென அறை கூவல் விடுப்பதும் இதே ஏகாதிபத்தியம்தான் என்பதை அமெரிக்க மக்கள் மறந்துவிடக் கூடாது.

முதலாளித்துவத்தின் முழுக்கதையின் சுருக்கம் இதுதான். தவிர்க்கவியலாமல் முதலாளித்துவம் சந்தை நெருக்கடியை உருவாக்குகிறது. மீளமுடியாத இந்த சந்தை நெருக்கடியால் மக்களின் வாங்கு சக்தி தொடர்ச்சியான சரிகிறது. 'அளவுக்கதிக உற்பத்தி' வேரூன்றிவிடுகிறது. இது தொழில் தேக்க நிலைக்கும், மந்த நிலைக்கும் இட்டுச்சென்று மக்களை ஓட்டாண்டிகளாக்கி சந்தை நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்துகிறது. சந்தை நெருக்கடியி லிருந்து மீண்டுவர முதலாளித்துவம் இரண்டு உலகப்போர்களில் ஈடுபட்டது. ஆனால் சந்தை நெருக்கடி இருமடங்கானது. பொருளாதாரத்தை செயற்கையாகத் தூண்டிட, ராணுவ–தொழில் கூட்டமைப்பை (military-industry-comples) உருவாக்கி, ஏகபோகவாதிகளை–ஆயுத வியாபாரிகளை ஆயுத உற்பத்தி செய்யவைத்து, தொழிற்சாலைகளையும் ஆயுத உற்பத்தியாளர்களின் லாபத்தையும் தொடர்ச்சி யாக வைத்திருக்க அவற்றை மக்கள் பணத்தைக் கொண்டு அரசாங்கமே வாங்கியது. பின்னர் அது போர் மனப்பான்மையை உருவாக்கி, உற்பத்தி செய்த ஆயுதங்களை நுகர்வதற்காக வட்டார–பிராந்தியப் போர்களையும் உருவாக்கி ராணுவ–தொழில் கூட்டமைப்பை உயிரோட்டமாக வைத்திருக்க ஆயுத உற்பத்தியை புதுப்பித்துக்கொள்ளும் வழி வகையைச் செய்தது.

இவ்வாறாகத்தான் அமெரிக்கா ஜனநாயகத்தின் பாதுகாவலன் என தன்னைக் கூறிக்கொண்டு, அதன் நெருக்கடி மிகுந்த பொருளாதாரத்தை உயிருடன் வைத்திருப்பதற்காகவே, எண்ணற்ற அப்பாவி மக்கள் இறந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், அது எண்ணற்ற போர்களை திட்டமிட்டு கண்காணித்து நடத்தியது. ஆழமான நெருக்கடியை அது இப்போது சந்தித்துக்கொண்டிருப்பதால், நேட்டோ அமைப்புக்கு செலவழித்ததைப்பற்றி அதிருப்தி தெரிவித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் பிற கூட்டமைப்புக்காக முயற்சித்து வருகிறது.

நெருக்கடியைத் தவிர்த்திட முதலாளித்துவம் உலகமயமாக்கலைப் பரிந்துரைத்தது. ஆனால் எதுவும் பலிக்கவில்லை. இப்போது ஆபத்தை விளைவிக்கக் கூடிய பாதுகாப்புவாதத்தை அது முயன்று பார்க் கிறது. இது ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிசத்திற்கு மிடையேயான பனிப்போர் என எதுவும் இல்லை கிடையாது. சோசலிச முகாம் இல்லாத ஒரு உலகத்தில், ரஷ்யாவும் சீனாவும் ஏகாதிபத்தியத்தின் அனைத்து தீமைகளையும் சுமந்துகொண்டிருக்கும் நிலையில், சந்தையைப் பிடிப்பதற்கான ஏகாதி பத்தியப் பேராசை கொதித்துக்கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. முதலாளித் துவத்தைத் தூக்கியெறியாமல், இக்கட்டமைப்புக் குள் நெருக்கடியிலிருந்து விடுதலை இல்லை என்பது ஐயத்துக்குமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது.

மனித இனம் சந்தித்துக்கொண்டிருக்கும் வரலாற்று ரீதியிலான கடமை இதுதான். புரட்சியின் மூலமாக இந்த அமைப்பை வேரோடு வெட்டி வீழ்த்தாமல், இக்கடமையை நிறைவேற்ற முடியாது. சுரண்டலிலும் ஏமாற்றிலும் உயிர்வாழ்ந்துகொண்டி ருக்கும் இச்சரண்டல் அமைப்பின் ஆதரவுடனேயே, அரசு எந்திரத்தின் மூலம் நடத்தப்படும் தேர்தல் மூலம் இதைச் செய்ய முடியாது. ஆனால், புரட்சிக்கு நீண்ட நெடிய தயாரிப்புகள் தேவைப்படுகிறது. அச்சமயம் படிப்படியாக வெகுஜனப் போராட்டங் களை முன்னெடுத்து வளர்த்தெடுத்து, தலைமைப் பீடத்தில் ஒரு உண்மையான புரட்சிகரத் தலை மையை நிறுவிக்கொண்டு, அப்போராட்டங்களை இறுதியான புரட்சிகரப் போராட்டத்திற்கு உகந்தவை களாக மாற்ற வேண்டும். அத்தகைய வெகுஜனப் போராட்டங்களில் ஏகாதிபத்திய விலைப்பட்டி யலுக்கு எதிரான மக்களின் போராட்டமும் ஒரு பகுதிதானாகும். வர்த்தக அல்லது விலைப்பட்டி யல்போர் என்றழைக்கப்படும் தற்போதைய போரானது, முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளின் சரிக்கட்ட முடியாத சந்தை நெருக்கடியை மையமாக வைத்து நடைபெறும் அவைகளுக்கு மத்தியிலான மோதல்கள் மற்றும் முரண்பாடுகளிலிருந்துதான் உருவாகிறது. அந்நாடுகளின் ஏகபோகங்களின் அதிகபட்ச லாபத்தைப் பறித்திட உதவி புரிவதற்காகத்தான் அது நடைபெறுகிறது. அந்தந்த நாடுகளிலுள்ள அவர்களின் முதலாளிகளால் சுரண்டப்படும், ஒட்டி உறிஞ்சப்படும் சாமானிய மக்களின் நலன்களுக்கும் அதற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை. அவர்கள் அதிலிருந்து பெறுவதற்கு எதுவுமில்லை. 'பொருளாதார தேசியவாதம்' மற்றும் பிற போர்வையிலிருக்கும் குறுகிய தேசியவாத கோஷங்களால் அவர்கள் திசைதிருப்பட்டுவிடக்கூடாது. மாறாக, வர்த்தகப் போர்கள் என்றழைக்கப்படும் இத்தகைய மக்கள் விரோதத் திட்டங்களை நிறுத்திட வேண்டுமென்ற கோஷத்தை அவர்கள் எழுப்ப வேண்டியிருக்கிறது. இத்தகைய கொடிய முயற்சிகளை நிறுத்த வேண்டு மென தத்தம் அரசாங்கங்களுக்கு அவர்கள் அழுத்தம்தர வேண்டியிருக்கிறது. உலக வர்த்த கமானது சட்டரீதியில் பரஸ்பரம் உகந்த அடிப் படையில் நடைபெறவேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்க வேண்டியுள்ளது. சமீபத்திய இறக்குமதி வரிப்போர் விட்டுச்சென்றிருக்கும் பாடம் இதுதான் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஆகஸ்ட் 5: பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் 42வது நினைவுதினம்






**ஆகஸ்ட் 6, 2018 அன்று தேனியில் நடைபெற்ற மாநில அளவிலான கூட்டத்தில் தோழர் ஸ்ரீதர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), மத்திய ஸ்டாப் உறுப்பினர் உரையாற்றுகிறார் (வலது) கூட்டத்தில் கலந்துகொண்டோர்**

# வரைவு தேசிய குடிமக்கள் பதிவேட்டில் உண்மையான இந்திய குடிமக்களின் பெயர்களை வேண்டுமென்றே சேர்க்காமல் விட்டிருப்பதற்குக் கண்டனம்

*அஸ்ஸாமில் வரைவு தேசிய குடிமக்கள் பதிவேடு வெளியிடப்பட்டது தொடர்பாக சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 31.07.2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

கடந்த 30.07.2018 அன்று வெளியிடப்பட்ட வரைவு தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (National Register of Citizens) இறுதி வரைவில் பெரும்பாலும் மத சிறுபான்மையினராகவும் மொழி சிறுபான்மையினராகவும் இருக்கும் உண்மையான இந்திய குடிமக்களில் 40 லட்சம் நபர்களின் பெயர்கள் இல்லை என்பதை ஊடகச் செய்திகளிலிருந்து அறிந்ததும் அதிர்ச்சியுற்றோம். இவ்வாறு பெருமளவு பெயர்கள் விடுபட்டிருப்பதானது 1985ஆம் ஆண்டு முதல் அஸ்ஸாம் கணபரிஷத் தலைமையிலான மாநில அரசாங்கமேகூட மேற்கொண்ட முந்தைய சர்வேக்கள் மற்றும் சரிபார்ப்பு நடவடிக்கைகள் எதனோடும் ஒத்துப்போவதாகத் தெரியவில்லை.

இது தொடர்பாக ஒரு விஷயத்தை நினைவுகூற வேண்டியுள்ளது. 1985 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் மேற்கொள்ளப்பட்ட இந்த சர்வேக்கள் மற்றும் சரிபார்ப்புகள் எவையும் இன–மத–மொழி பாரபட்சத்திலிருந்து விடுபட்டதாக இருக்கவில்லை என்பதும் மிகப்பெரும் பிரிவு உண்மையான இந்தியக் குடிமக்களை டி–வாக்காளர்கள் என ஒருதலைப் பட்சமாகவும் வஞ்சகத்தனமாகவும் அறிவித்து அவர்களது அடிப்படை உரிமையைப் பறித்தது என்பதும் உண்மையே. ஆனால் அப்படியிருந்தும் கூட சர்ச்சைக்குரிய இந்த டி–வாக்காளர்கள் எண்ணிக்கை 3.7 லட்சத்தைத் தாண்டவில்லை. இத்தகைய பின்புலத்தில் 40 லட்சத்திற்கும் அதிகமானோர் விடுபட்டுள்ளனர் என்பது நம்ப முடியாததாக இருப்பது மட்டுமின்றி, முன்னதாகவே ஐயப்பட்டதுபோல், இப்பட்டியலைத் தயாரிப்பதில் இனவாத, மதவாத வெறுப்பிலிருந்து எழுந்த, நன்கு பின்னப்பட்ட சதிவலை அப்பட்டமாகத் தெரிகிறது.

அந்நியர்கள் என முத்திரை குத்தப்பட்ட, சட்டத்திற்குப் புறம்பாக அல்லது அத்துமீறி நுழைந்தவர்களைக் கண்டறிவதற்காக பரந்து விரிந்த அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாகக் காட்டிக்கொண்டாலும் யதார்த்தம் என்னவெனில், இதுவரையில் நாட்டு குடிமக்களில் பிரிக்கவொணா பிரிவினராக விளங்கிய இவ்வளவு பெரிய ஜனத்திரளை ஒரேயொரு கையெழுத்து மூலம் அத்துமீறி நுழைந்தவர்கள் என அறிவித் திருப்பதானது, ஆளும் பாஜகவின் மத்திய, மாநில அரசாங்கங்களின் குணமாகிய பலவந்தமாக அடக்கியாளவதற்கான ஆர்வத்தையே காட்டுகிறது. இத்தகைய அடக்குமுறையானது, எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவு அதிகமாக மக்களைப் பிளவுபடுத்திவைக்கின்ற ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் வஞ்சகத்திட்டத்திற்கு திகிலூட்டும் வகையில் ஒத்துப்போய், இனவாத, மதவாத, நிறவாத, வகுப்புவாதப் பிரிவினைக்கும் வெறுப்புக்கும் தூபம் போட்டு வளர்ப்பதாகவும் அமைகிறது.

இந்தியாவின் எந்தவொரு மாநிலத்திலும் அவ்வளவு ஏன், உலகில் எங்குமே, எந்தவொரு அரசாங்கமும் தனது சொந்தக் குடிமக்களின் குடியுரிமையைப் பறிக்கின்ற இத்தகைய பாசிச நடவடிக்கையைப்பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை. அதுவும் ஒண்டுவதற்கு இடமின்றி தங்களது தாய் மண்ணிலிருந்து பலவந்தமாக பிடுங்கியெறியப் பட்டு நாடற்றவர்களாக நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படும் இவ்வுழைக்கும் மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் படுநாசத்தை நினைத்து பீதியில் உறைந்து போயிருக்கையில், எப்படிப்பட்ட மனிதநல நெருக்கடிக்கு இட்டுச்செல்லும் என்பதைப் பற்றிச் சற்றும் சிந்திக்காமல் இதுபோன்ற நடவடிக்கைகளை எந்த அரசாங்கமும் மேற்கொண்டதில்லை.

கிஞ்சித்தும் மனிதத் தன்மையற்ற இத்தகைய நடவடிக்கையானது, சதித்திட்டங்கள் மூலம் குறிவைக்கப்பட்ட மக்கட்பிரிவினரின் அடிப்படை உரிமையைப் பறிக்கின்ற பாசிச நோக்கம் கொண்ட அரசாங்கம்–நிர்வாகத்திற்கே உரித்தான ஒன்றாகும். அஸ்ஸாம் மாநிலத்தில் தேசிய குடிமக்கள் பதிவேட்டைத் தயாரிக்கும் இந்த நடவடிக்கையை இத்தகைய பாசிச நோக்கத்தோடு பாஜக தலைமையிலான மத்திய, மாநில அரசாங்கங்களும் மிகவும் இனவெறிமிக்க சக்திகளும் சேர்ந்து மேற்கொண்டுள்ளன. பதிவேட்டில் விடுபட்டுள்ளோரில் பரம ஏழைகளாகவும் நிர்க்கதியற்றவர்காளாகவும் உள்ள பெரும்பான்மையினரை மொத்தமாக படுநாசத்திற்குத் தள்ளக்கூடிய நடவடிக்கையேயாகும். இந்த வஞ்சக நடவடிக்கையின் மூலம் தங்கள் வாழ்வில் சந்தித்துவரும் கடுமையான பிரச்சினைகளை முன்வைத்து ஜாதி, மத, மொழிப் பாகுபாடின்றி அஸ்ஸாமின் அனைத்துப்பிரிவு உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து சக்திவாய்ந்த, ஒன்றுபட்ட இயக்கத்தைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அஸ்ஸாமின் வகுப்புவாத, இனவெறிவாத சக்திகளின் பாதக நலன்களுக்கு உகந்த வகையில் பின்னப்பட்டுள்ள இந்தப் பாசிச சதிவலையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். நிச்சயமானதொரு கெடுநோக்கத்தோடு வரைவு தேசிய குடிமக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ள உண்மையான இந்தியக் குடிமக்கள் அனைவரின் பெயர்களையும் இதில் உடனடியாகச் சேர்க்கவேண்டும் என்ற வலுவான கோரிக்கையை விடுக்கிறோம்.

அஸ்ஸாம் மற்றும் இந்தியாவின் பிற பகுதியில் உள்ள நல்லெண்ணமும் ஜனநாயக சிந்தனையும் கொண்ட மக்கள், நிலைமைக்கு ஏற்ப திரண்டெழுந்து இந்த வஞ்சகத்திட்டத்தை கைவிடுமாறு பாஜக தலைமையிலான மத்திய, மாநில அரசாங்களை நிர்ப்பந்திட ஒன்றுபட்ட சக்திவாய்ந்த நீடித்து நிலைக்கின்ற இயக்கத்தை வளர்த்தெடுக்குமாறு அறைகூவல் விடுக்கிறோம் ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**